Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 20 இதழ் - 10 அக்டோபர் 2007




யோசுவாவின் தலைமையின் கீழ் இஸ்ரவேல் ஜனங்கள் கானானுக்குள் பிரவேசித்து "எரிகோவில்" முதல் வெற்றியைப் பெற்ற போது இடிந்து விழுந்த மதில்கள் இவைகள் தான் என்று நம்பப்பட்டு, இன்றைக்கும் மண்மேடுகளாய் காட்சி தரும் இடம்.

(யோசு. 6-ம் அதி.)

(எங்கள் பயணத்தின் போது எடுக்கப்பட்டது)

# BIBLE MEDITATION

**TV PROGRAM**





## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கு தெரியவில்லை 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. சிறுவர் பகுதி ........ 17
5. வாலிபர் பகுதி ........ 19
6. சபை கூடிவருதலை சிலர் ஏன் விட்டுவிடுகிறார்கள் ........ 23
7. சாபாத் ஊர் விதவையும், குஷ்டரோகி நாகமானும் ........ 26
8. இரத்த சாட்சிகள் ........ 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 20 OCTOBER - 2007 Issue - 10

ஆசிரியர் உரை

## பாவம் வஞ்சனையானது

"பாவம்" என்ற மூன்றெழுத்து வார்த்தை, இந்தப் பார் முழுவதையும் பாடாய்ப்படுத்திக் கொண்டுள்ளது. இதிலே சிக்கி சீரழியாத மனிதனும், இதன் வஞ்சனைக்குத் தப்பிய மனிதனும் ஒருவனும் இல்லை. **"எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி"** என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது (ரோம. 3:23).

"பாவம்" என்ற இவ்வார்த்தைக்குப் பல பொருள் உண்டு. பழைய பிரமாணம் எழுதப்பட்ட மொழியாகிய எபிரேயத்திலும், புதிய பிரமாணத்தின் மொழியாகிய கிரேக்கத்திலும், இதற்கு ஒன்றுக்கும் மேலான அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. 'மீறுதல்', 'அக்கிரமம்', 'குறிதப்பல்', 'வழி தவறுதல்' என்பவை அவைகளில் அடங்கும். பாவத்திற்கு கொடுக்கப்படும் எல்லா விளக்கங்களையும் கவனித்துப் பார்த்தால், ஒரு பொதுவான முடிவுக்கு நாம் வரமுடியும். அதாவது, "பாவம்" என்பது "தேவனுக்கு விரோதமாகச் செய்யப்படும் ஒன்று" என்று. அதிகமான சங்கீதங்களை வடித்துக் கொடுத்த தாவீது அரசனும், அதிக இடங்களில் கிறிஸ்துவின் சபைகள் ஸ்தாபிக்கப்படக் காரணமாக இருந்த பவுல் அப்போஸ்தலனும் இக்கருத்தை ஏகமனதாக ஆமோதிக்கின்றனர். (சங். 51:4, ரோம. 8:7).

ஏவாள், ஆதாம் பாவத்தினாலே, பாவம் உலகத்திலே பிரவேசித்தது என்று நாம் பரிசுத்த எழுத்துக்களிலிருந்து கண்டாலும், இதன் ஆரம்பம் பற்றி நமக்கு சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆதாமும், ஏவாளும் பாவத்திலே

விழுவதற்கு முன்பாகவே, அவர்களை வஞ்சிக்கக்கூடிய தன்மையுள்ளதாக சர்ப்பம் இருந்துள்ளது. சர்ப்பத்திற்குள்ளாக இந்தப் பாவம் எப்பொழுது புகுந்தது என்று நமக்குச் சொல்லப்படவில்லை. சரி; இதன் ஆரம்பம் பற்றி ஆராய்வதை விட, இதன் விளைவுகளைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் நல்லது.

பாவத்திற்கு மனிதனைப் பாழாக்கும் பயங்கரமான தன்மைகள் பல உண்டு. அவைகளில் கொடுமையானது, அதன் **வஞ்சிக்கும் தன்மை**, பூமியிலே, மனிதனுக்குள்ளாக புகுந்த, முதல் பாவமே, வஞ்சனையான முறையிலே தான் புகுந்தது. அந்த வஞ்சனையிலே ருசி கண்ட பாவம் இன்றளவும் அதே பாணியைக் கையாண்டு வருகிறது. அப்போஸ்தலன் பவுல் பாவத்தினால் தனக்கு நேர்ந்த கசப்பான அனுபவத்தை எப்படி வெளிப்படுத்தி யுள்ளார் என்பதைக் கவனியுங்கள்.

**பாவமானது கற்பனையினாலே சமயம் பெற்று, என்னை வஞ்சித்து, அதினாலே என்னைக் கொன்றது** (ரோம. 7:11) என்று, தன்னுடைய பழைய வாழ்க்கை குறித்தும், தன்னுடைய பக்தி வைராக்கியத்தைக் குறித்தும், பிலிப்பியருக்கு பட்டியலிட்டுக் காட்டும் பவுல், தான் "...... நியாயப் பிரமாணத்திற்குரிய, நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவன்" என்று பெருமையோடு சொல்கிறான் (பிலி. 3:6). இப்படி, தேவனுக்காக, தேவ நீதிக்காகப் பக்தியோடும், வைராக்கியத்தோடும் வாழ விரும்பிய பவுலைப் போன்ற திட நம்பிக்கையுள்ளவர்களையே, பாவம், சமயம் பார்த்து வஞ்சித்திருக்கிறதென்றால், அதன் வஞ்சிக்கும் தன்மை எவ்வளவு கொடிதானதாக இருக்கிறதென்று நாம் எளிதாகப் புரிந்து கொள்ளலாம். வஞ்சித்தது மாத்திரமல்ல. ஆவிக்குரிய ரீதியில் அவனைக் கொன்றும் போட்டது.

வஞ்சித்தல் என்றால் **தந்திரமான முறையில் ஏமாற்றுதல்** ஆகும். தன்னால் முடியாததை முடியும் என்று சொல்லி மனிதனைப் பாவம் ஏமாற்றுகிறது. தனது உண்மைத் தன்மையை மறைத்து, போலியான ஒரு தோற்றத்தை அவன் விரும்பும் வகையில் அவனுக்குக் காட்டுகிறது. அதுதெரியாத மானிடம் அதிலே மயங்கி விழுந்து தன்னை முற்றிலுமாக அழித்துக் கொள்கிறது.

இப்பொழுது, பாவம் மனிதனை ஏமாற்றும் சில வழிகளைக் கண்டு, அதற்கு இரையாகாமல் நாம் நம்மைக் காத்துக்கொள்வோம்.

## I பாவம் நாம் சொன்னபடி கேட்பதாகச் சொல்லி ஏமாற்றும் :

எந்த ஒரு பாவமும் முதலில் பார்ப்பதற்கு "ஐயோ பாவம்" என்பது போலத்தான் தோன்றும். அதாவது, நாம் சொல்கிறபடியெல்லாம் அது கேட்பது போலவும், நாம் வேண்டாம், போதும் என்று சொல்லும்போது, நம்மை விட்டுப் போய்விடுவது போலவும் நடந்து கொள்ளும். அப்பொழுது,

நாம் செய்யும் எந்த ஒரு பாவமும் நம்முடைய முழுக்கட்டுப்பாட்டில் இருப்பது போலத் தெரியும். ஆனால், அந்தப் பாவத்தில் அல்லது பாவங்களில் நாம் தொடர்ந்து ஈடுபடும்பொழுது, பாவமானது தனது வஞ்சனையின் மூலம், நம்மையுமறியாமல் நம்மை அடிமைப்படுத்தி, நமக்கு எஜமானாக மாறும்.

ஆம், பாவம் செய்ய ஆரம்பிக்கும் போது, நாம் விரும்பும் போது மாத்திரம் செய்து வந்த பாவங்கள், சிறிது காலமாகும் போது, தன்னுடைய விருப்பத்திற்கு நம்மை ஆட்டுவிக்கும். சந்தர்ப்பம் கிடைக்கும்போது பாவம் செய்து வந்த நாம் ஒரு கட்டத்தில் பாவம் செய்யும் சந்தர்ப்பங்களைத் தேடி அலைய வேண்டி வரும். துவக்கத்தில், ஒன்றைப் பற்றிய நினைவு வரும்போது மாத்திரம் நாம் பாவம் செய்யும் நிலை இருந்திருக்கும். காலப்போக்கில் நம்முடைய நினைவுகளிலெல்லாம் அந்தப் பாவம் நிறைந்து, நம்மை நிலைகுலைய வைக்கும்.

ஒருவேளை, பாவம் எந்த வகையானதாக இருந்தாலும், அவைகளைச் செய்கிற மனிதன் அதற்கு அடிமையாயிருக்கிறான் என்பது யதார்த்தமான உண்மை. இல்லை, இல்லை நான் விரும்பும்போது மாத்திரமே பாவம் செய்கிறேன் என்று ஒருவன் எவ்வளவுதான் அடித்துச் சொன்னாலும், அவன் அதற்கு அடிமைதான். ஏனெனில், பாவம் மற்றும் அதன் தன்மை பற்றியும், அவைகளைச் செய்யத் தீவிரித்துத் திரியும் மனிதன் பற்றியும் மிக நன்றாக அறிந்த இயேசு ஆண்டவரின் கூற்றைப் பாருங்கள். **இயேசு அவர்களுக்குப் பிரதியுத்திரமாக; பாவம் செய்கிறவன் எவனும், பாவத்திற்கு அடிமையாயிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.** (யோவா 8:34). மெய்யாகவே, மெய்யாகவே என்று இயேசு சொன்ன வார்த்தைகள் எப்படிப் பொய்யாக முடியும்?.

இதே கருத்தை, பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால், அப்போஸ்தலன் பவுல் ரோமபுரியாருக்கு எழுதும்போது, இன்னும் விளக்கமாகச் சொல்லியுள்ளார். ரோம. 6:16-22 பகுதியை வாசித்துத் தெரிந்து கொள்ளுங்கள். எந்த ஒரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில், **பாவத்திற்கோ** அல்லது **நீதிக்கோ** அடிமையாயிருக்கிறான். இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை என்று ஒன்று இல்லை.

அப்போஸ்தலன் பேதுருவும், இக்கூற்றை வலியுறுத்தும் கருத்தைத் தன் நிருபத்தில் சொல்லாமலிருக்கவில்லை. **தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும். அவர்களுக்குச் சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள். எதினால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அடிமைப்பட்டிருக்கிறானே** (2பேதுரு 2:19). பாவம் செய்கின்ற ஒருவனின் நிலை பற்றி பரிசுத்த வேத எழுத்துக்கள் எவ்வளவு திட்டமும், தெளிவாகச் சொல்லுகிறதென்று பார்த்தீர்களா?.

இந்த வசனங்களோடு நம்முடைய வாழ்க்கையை ஒப்பிட்டு, நாம் நம்மைத் தற்பரிசோதனை செய்து பார்த்தால் உண்மை நிலையும் அதுதான் என்பதை சந்தேகத்திற்கிடமில்லாமல் ஒத்துக்கொள்வோம்.

ஆனால், நம்மில் குடிகொண்டு, நம்மை அடிமைப்படுத்தி ஆட்டுவித்துக் கொண்டிருக்கும் பாவங்களை, நாம் **ஆரம்ப நாட்களில் செய்யத் தொடங்கின போது**, என்ன மனநிலையோடு துவக்கினோம் என்பதை கொஞ்சம் நினைத்துப் பார்ப்போம். ஒருவேளை அது புகைப் பிடிக்கும் பழக்கமாக இருக்கட்டும், குடிப்பழக்கமாக இருக்கட்டும், விபச்சாரமாக இருக்கட்டும், சூதாட்டமாக இருக்கட்டும் இன்னும் திருட்டு, பொய், புரட்டு, ஏமாற்று, லஞ்சம், பித்தலாட்டம் என்று எதுவாக இருக்கட்டும், இவைகளைச் செய்ய நாம் ஆரம்பிக்கும்போது, என்ன மனநிலையோடு ஆரம்பித்தோம்? சொல்லுங்கள். அப்படியே யோசியுங்கள். எல்லாமே, தீமை என்று தெரிந்தும், வாலிபத்தில் நமக்குக் கிடைத்த சில சேர்க்கைகளுக்காக, நாம் வேலை செய்த இடங்களில் நிலவிய சூழ்நிலைக்காக, குடும்ப பாரத்திற்காக, ஒரு ஜாலிக்காக, மற்றவர்களின் நிர்பந்தங்களுக்காக அவை களினால் கிடைக்கும் உடனடி லாபங்களுக்காக, தற்காலிக இன்பங்களுக்காக, இன்னும் விளையாட்டுக்காகவும் கூட அவைகளைச் செய்ய ஆரம்பித்தோம். அப்படித்தானே, கொஞ்ச காலத்திற்கு இருக்கட்டும், பிறகு சூழ்நிலை மாறும்; பிறகு இவைகளையெல்லாம் ஒரு நாளில் ஒழித்துவிடலாம் என்றெல்லாம் மனப்பால் குடித்தோம் தானே.

இப்பொழுது நம்முடைய நிலை என்ன? அதை ஏன் கேட்கிறீர்கள் என்கிறீர்களா? இன்றைக்கு நம்மில் எத்தனைபேர், பாவங்களுக்கு அடிமைப்பட்டு, நம்முடைய வாழ்வை அழித்துக் கொண்டுள்ளோம்? விளையாட்டுக்காக ஆரம்பித்தவை இன்று விசுவ ரூபமெடுத்து ஆடிக் கொண்டிருக்கிறதே எப்படி? அவைகளுக்கு பயந்து நாம் நடுங்கிக் கொண்டிருக்கவில்லையா? குடியின் வெறியால் குடி முழுகிப்போன குடும்பங்களைக் கணக்கிட முடியுமா? புகையின் கொடுமையால் பொலிவிழந்து போன சரீரங்களை எண்ணத்தான் முடியுமா? சூதாட்டத்தால் சூறையாடப்பட்ட சொத்து சுகங்களுக்கு அளவுதான் உண்டா? விபச்சார மயக்கத்துக்கு விட்டில் பூச்சிகளாகிவிட்டு, ஆட்கொல்லி நோய்க்கு அஞ்சி, அஞ்சி வாழ்ந்து கொண்டிருப்பவர்களை அடையாளம்தான் காண முடியுமா?

சரி, இந்த நிலை எப்படி வந்தது? பாவம், நம்மை வஞ்சித்தது, பாவம் நம்மை ஏமாற்றியது. நாம் விரும்பும் போது நம்மை விட்டு ஓடுகிறேன் என்று சொல்லி நம்மை நம்பவைத்து, அதனடிப்படையில், நம்மை செயலில் இறக்கி, இப்பொழுது இந்த நிலைக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. பாவத்தின் வஞ்சனை இப்பொழுதாகிலும் புரிகிறதா? தயவு செய்து உணர்வடையுங்கள்.

### II பாவம் அழகான தோற்றத்தைக்காட்டி நம்மை ஏமாற்றும்.

ஒருவேளை, அழகு இரசனைக்கு ஏற்றதாக இருக்கலாம். ஆனால், நடைமுறையில் நன்மைக்கு ஏற்றதாக இல்லை. அழிவுக்கும் பெருந்தீமைகளுக்கும் வீழ்ச்சிக்கும் அது ஆதாரமாக இருந்தது என்று சரித்திரம் சாட்சி பகர்கிறது. இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. அழகை, ஒரு அழிக்கும் ஆயுதமாக உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தவன் பிசாசு தான். இவ்வாயுதத்தை அவன் வெகு தந்திரமாகக் கையாண்டு, தேவசாயலோடு சிருஷ்டிக்கப்பட்டு, நித்திய காலமாய் வாழும்படியாய் உண்டாக்கப்பட்ட மனிதனை ஆவிக்குரிய ரீதியிலும், சரீரப்பிரகாரமாகவும் மரிக்கும்படியாகச் செய்தான்.

ஆம், அப்பாவியாக இருந்த ஏவாள், அழகிலே மயங்கித்தான் பாவியானாள். சர்ப்பம் சொன்ன விருட்சத்தைக் கண்டபோது, அவளுடைய பார்வைக்கு அது இன்பமாக இருந்திருக்கிறது என்று வசனம் சொல்கிறது.

**அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதன் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்** (ஆதி. 3:6). வசனத்தின் கடைசிப்பகுதி அவள் **பறித்துப்புசித்தாள்** என்று கூறுவதைக் கவனிக்க வேண்டும். அதின் கனியைப் பறித்துப் புசிக்க வேண்டும் என்ற ஆவலை, சர்ப்பம் மாத்திரம் தூண்டவில்லை. **விருட்சத்தின் அழகும் சேர்ந்தே தூண்டியிருக்கிறது.**

ஒருவேளை, அந்த மரம் பார்வைக்கு இன்பமாக இருந்திருக்காவிட்டால், ஏவாள் அதின் பக்கமே போயிருக்கமாட்டாள். கனியைப் பறிக்கவும், புசிக்கவும் நேராமல் போயிருக்கலாம். அப்பொழுது, அதைத் தன் கணவனுக்கும் கொடுத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. அபபொழுது, தேவகட்டளை மீறப்படாமல் இருந்திருக்கும். பாவம் உலகில் வந்திருக்காது. ஆணுக்கும், பெண்ணுக்கும், இந்தப் பூமிக்கும் கடுமையான சாபம் கிடைத்திருக்காது. மானிடம் இந்தப் பூமியில் அல்லல்படாத ஒரு வாழ்க்கைக்குப் பங்காளிகளாக மாறியிருக்கக்கூடும். மனிதனுக்கான தேவதிட்டம், வித்தியாசமாகப் போயிருக்கவும் கூடும், யாருக்குத் தெரியும்?

ஆனால், எல்லாம் எதினால் வந்தது? அழகில் மயங்கினதால் வந்த வினை. இன்றைக்கும், மனிதனுக்கு சரீர உபாதைகளையும், ஆத்தும உபாதைகளையும் ஏற்படுத்தும் கடுந்தீமைகள் அழகிய தோற்றத்துடன் தான் சமுதாய சந்தையில் வலம் வருகிறது. உதாரணமாக, மது வகைகளை தகர டப்பாக்களில் அடைத்து வைத்து, பிளாஸ்டிக் டம்ளர்களில் ஊற்றிக் கொடுத்தால், மிகக் குறைவானவர்களே அதை விரும்புவர். குடிக்கும் பழக்கத்திற்கு ஆளாவோரும் மிகமிகக் குறைவான எண்ணிக்கையிலேயே இருப்பர். ஆனால் இன்று நிலைமை எப்படி? கண்ணைக் கவரும் மாடல்களி

லான பாட்டில்களில் அடைக்கப்பட்டு, பளிச்சென்று வெளியில் தெரிகிற மாதிரியான கண்ணாடி கோப்பை மற்றும் கிண்ணங்களில் பரிமாறப்படுகிறது. அவைகளில் அது ததும்பும் போது, வேண்டாம் என்று நினைப்பவர்கள் உள்ளங்கள் கூடத் தடுமாறுகிறது. சரி, இன்று ஒரு நாள் இருக்கட்டும் என்று பொய்ச் சமாதானம் செய்து கொள்கிறது. ஞானி சாலமோன் இந்த அவல நிலை குறித்து எப்படிச் சொல்கிறார் என்று பாருங்கள். **மதுபானம் இரத்த வருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும், முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும்; விரியனைப்போல் தீண்டும், உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும், உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்** (நீதி 23:31-33).

மேற்சொல்லப்பட்ட தீமைகளுக்கு அடிப்படை என்னவென்று தெரிகிறதா? பாராதே என்று சொல்கிறான் ஞானி. ஆகவே, அடிப்படை **பார்த்தல்,** பார்க்கும் பொழுது, அதன் தோற்றம், அழகு இவை கவர்ந்திழுக்கிறது.

அடுத்து, தாவீதின் வாழ்க்கையில் நடந்ததும் இதற்குச் சரியான எடுத்துக்காட்டாகும். சிறுவயது தொடங்கி, கர்த்தருக்குப் பயந்த ஒரு வாழ்க்கையை அவன் நடத்தியிருந்தும், பாவம் இந்த தாவீதை **அழகு** என்ற படுகுழியிலே குப்புறத் தள்ளியது. தான் ஆடுமேய்க்கும் இளைஞனாக இருந்த பொழுது, கர்ஜித்து வந்த கோலியாத்தைக் குறித்து இவ்விதமாகக் கூறியுள்ளான். **ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்த சேதனமில்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்** (1சாமு. 17:26) என்றான். தன்னுடைய தேவனைப் பற்றி இவ்வளவு பெருமிதம் கொண்டிருந்த தாவீது அழகிலே மயங்கி பத்துக்கட்டளைகளில் மூன்று கட்டளைகளை பகிரங்கமாக மீறினான்.

ஆம், பத்சேபாளை உப்பரிகையின் மேலிருந்து பார்த்து, அவளது **அழகிலே** மயங்கினான். அவளை அடைவதற்காக அவன் செய்த சில்லறைத்தனங்கள் மிகக் கேவலமானது "பிறர் பொருளை இச்சியாதிருப்பாயாக", "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக", "கொலை செய்யாதிருப்பாயாக", என்ற மூன்று தேவ கட்டளைகளை கூசாமல் மீறினான். (I சாமு 11 அதி).

பாவம் மனிதனை எப்படியெல்லாம் அலைக்கழிக்கிறது பார்த்தீர்களா? அழகின் பின்னால் போனால் மிஞ்சுவது அசிங்கமே. ஜாக்கிரதையாயிருந்து பாவத்தின் வஞ்சனையில் சிக்காமல் நம்மைக் காத்துக்கொள்வோம்.

### III. பாவம் விதைப்பதை அறுக்கத் தேவையில்லை என்று சொல்லி ஏமாற்றும் :

மனிதன், இன்று இவ்வளவு தீவிரமாகப் பாவத்தில், கொஞ்சம் கூடப் பயமில்லாமல் ஈடுபடுகிறான் என்றால், அதற்குக் காரணம், அவைகளுக்குத்

தண்டனை இல்லையென்ற அவனது ஆழமான நினைப்புத்தான். தண்டனைக்குப் பயப்படும் பயம் மனிதனுக்கு இயல்பாகவே உண்டு. அந்த இயல்பை மீறி அவன் நடந்து கொள்கிறான் என்றால், அதற்குக் காரணம் அவன். ஏமாற்றப்படுகிறான் என்பதே. அவனுக்கு முன்பாக வீசப்படும் கண்ணியில் அவன் மதியில்லாமல் சிக்கி விடுகிறான்.

அந்த வேலையை பாவம், மிகத் தந்திரமாகச் செய்கிறது. அப்படியே, ஒருவேளை தண்டனை கிடைத்தாலும், அது இப்பொழுது கிடைக்கும் இன்பத்திற்கு ஈடாகாது என்று சொல்லி நூதனமாக தன் காரியத்தைச் சாதிக்கிறது.

ஆனால், செய்த தவறுகளுக்கு தண்டனை உண்டு என்று வேதாகமம் மிகத்தெளிவாகக் கூறுகிறது. பழைய ஏற்பாட்டின் நாட்களில், யோசுவாவின் மரணத்திற்குப் பிறகு, கானானில் எஞ்சியிருக்கிற சில ராஜாக்களோடு போரிட வேண்டிய கட்டாயம் இஸ்ரவேலருக்கு இருந்தது. கர்த்தருடைய அனுமதியோடு அந்த யுத்தங்களை வெற்றிகரமாக அவர்கள் நடத்தினர். ஒருசமயம் அதோனிபேசேக் என்ற ராஜா தோல்வியுற்று இவர்களின் கைக்கு தப்பி ஓடிப்போகையில், அவனைப் பின் தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டார்கள் (நியாயா. 1:6) அந்த நிலையில் அதோனிபேசேக் ராஜா எப்படிப் புலம்பியுள்ளான் என்று கொஞ்சம் கவனியுங்கள் உண்மை விளங்கும்.

**அப்பொழுது அதோனிபேசேக்; எழுபது இராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின் மேல் விழுந்ததைப் பொறுக்கித்தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான்** (நியாய. 1:7).

நீதியுள்ள நம் தேவனிடமிருந்து நாம் யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த உண்மை தெரியாமல் மனிதன் தேவனோடு, விளையாடிக் கொண்டுள்ளான்.

புதிய ஏற்பாட்டிலும் இது இன்னும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. விசுவாசத்தில் தள்ளாடிக் கொண்டிருந்த கலாத்திய பட்டணத்து மக்களுக்கு, பவுல் எச்சரிப்புக் கொடுத்து எழுதும் வசனத்தைப்பாருங்கள். **மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார், மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன், ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்** (கலா. 6:7,8).

இதைவிடத் தெளிவாக, வேதம் வேறு எப்படிச் சொல்ல முடியும்? இவ்வளவு தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பது கூட விளங்காமல் அவன் பாவத்திலே ஈடுபடுகிறான் என்றால், மனிதன் எவ்வளவு கொடுமையாக வஞ்சிக்கப்படு கிறான் என்று பாருங்கள். பாவம் எவ்வளவு நச்சுத்தன்மை உடையதாக உள்ளது எனக் கவனியுங்கள். இந்தப் பாவத்திடம் எவ்வளவு கவனமாக இருக்க வேண்டியது அவசியம் என சிந்தியுங்கள். பாவம் நம்மை முட்டாளாக்க இனி ஒருபோதும் நாம் அனுமதிக்க வேண்டாம்.

நாம் ஒவ்வொருவரும், பாவம் என்ன சொல்கிறதென்றும், எப்படித் தோற்றமளிக்கிறதென்றும் பாராமல், அதனுடைய உண்மைத் தன்மையையும், அதின் பயங்கரத்தையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் காண்போம். பாவம் என்ன தான் பித்தலாட்டம் செய்து நம்மை வஞ்சிக்கப் பார்த்தாலும், நாம் மயங்கிவிடாமல், பாவத்தை அதன் நிஜத்தன்மையோடு பார்த்து நம்மைவிட்டு விரட்டுவோம்.

பாவம் எவ்வளவு அசிங்கமானது என நாம் இப்போது பார்த்துள்ள படியால், அதிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள, மிகச் சிறந்த வழி ஒன்றுள்ளது. அதின்படி நாம் யாவரும் செய்வோம். தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்வோம் (பிர. 12:13). ஏனெனில், அவருடைய கற்பனைகள் நீதியுள்ளவைகள் (சங். 119:72).

ஆகவே, நீதியுள்ள அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, பாவமில்லாத ஒரு வாழ்க்கை வாழ, பரலோகத்தின் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் இரக்கம் கட்டளையிடுவாராக!

***EZS. ராஜநாயகம்***

## பாவமும், விடுதலையும்

1. **..... இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் (I யோவான் 1:7)**
2. **..... நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்..... (அப். 2:38)**
3. **..... நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான். (அப். 22:16).**
4. **..... ஞானஸ்நானமானது ..... நம்மையும் இயேசு கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினால் இரட்சிக்கிறது (I பேது. 3:21)**

# எக்லீசியா வேதாகமக் கல்லூரி

## மாணவர் சேர்க்கை அறிவிப்பு

# EKKLESIA BIBLE COLLEGE

P.O. Box-27, KANGAYAM - 638 701. India.

## STUDENTS ADMISSION NOTIFICATION

**பு**திய ஏற்பாட்டு உபதேசத்தில் முழு நம்பிக்கையும், கிறிஸ்துவின் நற்செய்தியை நானிலம் எங்கும் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில் இணையில்லா ஈடுபாடும் கொண்ட **வாலிபர்களிடமிருந்து** விண்ணப்பங்கள் உடனடியாக வரவேற்கப்படுகின்றன. **திருமணமாகி 35 வயதைத் தாண்டாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.**

**காலம்** : **3 வருடம்** (செமஸ்டர் முறை)

**Duration** : **3 Years** (Semester System)

**கல்வித்தகுதி** : **+2 தேர்ச்சி** (அல்லது) **பட்டப்படிப்பு**

**Qualification** : **+2 Pass (or) Any Degree**

**பட்டம்** : **வேதயியலில் இளங்கலை பட்டம்**

**Degree** : **B.B.S.** (Bachelor of Biblical Studies)

**தகுதியுள்ளவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும்**

விபரங்கட்கும், விண்ணப்பங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

**இயக்குநர்**

எக்லீசியா வேதாகமக் கல்லூரி

தாராபும் ரோடு, காங்கயம் - 638 701. இந்தியா

✆ 04257 - 230030, 230603 செல் : 98427 - 30382

# "நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை"

"பரிசுத்த ஆவியானவரின் பணி என்னும், இந்தப் பாடத்திற்காக நாம் எடுத்துக்கொண்ட, சுவிசேஷத்தின் கீழ்க்கண்ட வசனப்பகுதியைக் கவனியுங்கள்; "இயேசு எருசலேமுக்குப் போகும் போது, வழியிலே பன்னிரண்டு சீடரையும் தனியே அழைத்து; இதோ, எருசலேமுக்குப் போகிறோம்; மனுஷ குமாரன் பிரதான ஆசாரியரிடத்திலும் வேத பாரகரிடத்திலும் ஒப்புக் கொடுக்கப்படுவார்; அவர்கள் அவரை மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அவரைப் பரியாசம் பண்ணவும், வாரினால் அடிக்கவும், சிலுவையில் அறையவும், புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுப்பார்கள்; ஆகிலும் மூன்றாம் நாளிலே அவர் உயிரோடே எழுந்திருப்பார் என்றார். அப்பொழுது, செபெதேயுவின் குமாரருடைய தாய் தன் குமாரரோடு கூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்து கொண்டு; உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றாள். அவர் அவளை நோக்கி; உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்; உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டு பேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்ய வேண்டும் என்றாள். இயேசு பிரதி யுத்திரமாக; நீங்கள் கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா என்றார். அதற்கு அவர்கள் கூடும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி; என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள் பெறுவீர்கள்; ஆனாலும், என் வலது பாரிசத்திலும் என் இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம் பண்ணப் பட்டிருக்கிறதோ அவர்களுக் கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளுவது என் காரியமல்ல என்றார். மற்றப் பத்து பேரும் அதைக் கேட்டு, அந்த இரண்டு சகோதரர் பேரிலும் எரிச்சலானார்கள். அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்ட வரச் செய்து; புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாக இருக்க விரும்பினால்; அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே, மனுஷ குமாரனும்

ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். அவர்கள் எரிகோவிலிருந்து புறப்பட்டுப் போகையில், திரளான ஜனங்கள் அவருக்குப்பின் சென்றார்கள்" (மத்தேயு 20:17-29).

மாற்கு 10:35ம் வசனத்தின்படி, செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபு, யோவான் என்பவர்களும், அவர்களுடைய தாயும் இயேசுவிடம் வந்து, அவருடைய ராஜ்யம் அல்லது சபை நிறுவப்பட்டதும், அவர்களை இயேசுவின் வலது, இடது பக்கங்களில் உட்கார வைக்கும்படிக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியவில்லை என்பதாக இயேசு உடனே பதிலளித்தார். சிலுவைப்பாடு களாகிய திருமுழுக்கைப் பெற்று, இயேசு மரணத்தைச் சந்திக்கப் போகிறார் என்பதை அவள் புரிந்து கொள்ளவில்லை. இவற்றை உங்களால் தாங்கிக் கொள்ளக்கூடுமா என்று கர்த்தர் கேட்டுவிட்டு, பின்னர் பதிலளித்தார்; நீங்கள் அவ்வாறு செய்யக் கூடுமாயிருப்பினும் கூட, உங்களுடைய வேண்டு கோளை நிறைவேற்றும் வல்லமை எனக்கில்லை என்பதாகக் கூறுகிறார். சுயநலத்தாலோ அல்லது தாய்ப்பாசத்தாலோ தெரியவில்லை, அந்த சீடர்களின் தாய் தனது குமாரர்களுக்கு சிறந்த பதவிகளைப் பெற்றுத் தரவேண்டுமென்ற விருப்பத்தில் இருந்தாள் என யூக்க முடிகிறது. ஆனால், யாராவது முதன்மையாக இருக்க விரும்பினால், அவன் பிறருக்கு ஊழியக்காரனாக இருக்க வேண்டும் என இயேசு விளக்கினார்.

என்றாலும், இன்றைய நாட்களிலும் பல மக்கள் கர்த்தர் ஒரு போதும் வாக்களித்திராத காரியங்களை அவரிடம் வேண்டும் போது தாங்கள் எதைக் கேட்கிறார்கள் என்பதை அறியாதிருக்கின்றனர் என்ற கருத்தை இங்கு குறிப்பிட நான் விரும்புகிறேன். முக்கியமாக, பரிசுத்த ஆவியானவர் சம்பந்தப்பட்ட காரியங்களைப் பற்றி நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

உதாரணமாக, பலர் பரிசுத்த ஆவிக்காக வேண்டுகின்றனர். அவர்களைப் பார்த்து, கர்த்தர் கூறுவார்; "நீ கேட்டுக் கொள்ளுகிறது இன்னது என்று உனக்குத் தெரியவில்லை". பொதுவான விசுவாசிகளுக்கு இந்தத் திருமுழுக்கு ஒரு போதும் வாக்களிக்கப்படவில்லை. ஆதியில் அப்போஸ் தலர்களுக்கு மட்டுமே தேற்றரவாளன் அல்லது பரிசுத்த ஆவியானவர் வாக்களிக்கப்பட்டிருந்தார் (யோவான் 14:26; லூக்கா 24:49; அப். 1:8). யூதர்களைப் போலவே, புறஜாதியாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கின்றனர் என அப்போஸ்தலர்கள் திருப்தியடையும்படியாக கொர்நேலி யுவும் அவனுடைய வீட்டாரும் கூட பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றனர். அப்போஸ்தலருடைய நடபடி 10,11 அதிகாரங்களில் இது தெளிவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மக்கள் மட்டும் சுவிசேஷத்தைப் படித்துக் கற்றுக் கொள்வார்களேயானால், பின் கர்த்தர் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாதவற்றையெல்லாம் அவரிடம் கேட்கமாட்டார்கள்.

இதே தனிப்பட்டவர்கள் தான் இன்றைய நாட்களிலேயும் நெருப்பினால் திருமுழுக்கு நடத்தப்படுகின்றது என நினைக்கின்றனர். இதுவும் தவறே. நெருப்பினால் திருமுழுக்கு என்பது எதிர்காலத்தில் நடைபெற வேண்டிய ஒரு காரியம். அந்த சமயத்திலே கெட்டவர்களை கர்த்தர் நெருப்பு ஏரியிலே தள்ளி தண்டிப்பார். இதுவே நெருப்பின் திருமுழுக்கு என்பதாகும். அது என்னவென்று அறிந்திருந்தால், இந்தத் திருமுழுக்கு தங்களுக்கு வேண்டுமென யாரும் நிச்சயமாக கேட்கமாட்டார்கள். தயவு செய்து வெளிப்படுத்தின விசேஷம் 21:8ம் வனசத்தைப் படியுங்கள்.

அற்புதங்களைச் செய்ய வேண்டுமென பெந்தெகொஸ்தே இயக்கத்தார் கர்த்தரிடம் கேட்கின்றனர். அவர்களுக்குப் பரிசுத்த ஆவியின் வல்லமை இருப்பதாகவும், எனவே அவர்கள் மூலமாக வியாதிக்காரர்களை சுகப்படுத்தவும், இன்னபிற அற்புதங்களைச் செய்யவும் கர்த்தர் கிரியை செய்வதாக அவர்கள் கூறுகின்றனர். இல்லை, இவர்களிடம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் கிடையாது, அல்லது அற்புதமாக வியாதிக்காரர்களை சுகப்படுத்தவோ, மரித்தோரை உயிரோடு எழுப்பவோ, அல்லது வேறு எதையாவது அற்புதமாகச் செய்ய வேண்டுமென்று கேட்கும் இவர்களுடைய ஜெபங்களுக்கு கர்த்தர் பதில் அளிப்பதும் இல்லை. அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் மேல் கைகளை வைத்தனர்களோ அவர்களும் மட்டுமே அற்புதங்களைச் செய்யக்கூடியவர்களாக இருந்தனர் என நாம் சுவிசேஷத்தில் படிக்கிறோம். (அப். 2:43; 8:6,7). இன்று ஒரு அப்போஸ்தலரும் அல்லது அவர்கள் கைகளை வைத்தவர்களும் இல்லாத காரணத்தால், அற்புதங்கள் செய்யக்கூடிய வல்லமை படைத்தவர்கள் எவரும் இங்கு இல்லை. அப்போஸ்தலர்களும், அவர்கள் யார் பேரில் கைகளை வைத்தார்களோ அந்த சீடர்களும், அற்புதங்களைச் செய்தபோது, அற்புதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததை ஒவ்வொருவரும் அறிந்தனர். ஏனெனில், அவர்கள் மரித்தோரை எழுப்பினார்கள். பிசாசுகளைத் துரத்தினர், இன்னும் கொஞ்சங்கூட சந்தேகத்திற்கு இடமில்லாதபடி அற்புதங்கள்தான் என ஏற்றுக்கொள்ளப்பட்ட காரியங்களைச் செய்தனர். இன்று உரிமை கொண்டாடுவது மட்டுமே நடக்கிறது, ஆனால், உண்மையாக நிரூபிக்கும் செயல்கள் எதுவும் நடப்பதில்லை. ஒருவேளை இன்று அற்புதங்களைச் செய்கிறவர்கள் இருப்பின், தேவனுடைய வல்லமையால் அவர்கள் அவற்றைச் செய்வதில்லை.

நாமகரண போதகர்கள் இன்று பிசாசைத் துரத்த வேண்டுமென்று கர்த்தரிடம் கேட்கின்றனர். ஆனால் கிறிஸ்து கூறியது போல, "சாத்தான் சாத்தானை துரத்துமா?" இன்று அற்புதங்களைச் செய்யவும், பிசாசுகளைத் துரத்தவும் வேண்டி, பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை கர்த்தர் யாருக்காவது கொடுப்பதாக இருந்தால், அவருக்குக் கீழ்ப்படியக் கூடிய, சுவிசேஷத்தின்படியாக அவருடைய பெயரைத் தாங்கின அவருடைய

சபையில் அங்கம் வகிக்கக் கூடியவர்களுக்கு அந்த வல்லமையை அளித்திருப்பார். ஆனால், சந்தேகமின்றி, அவருடைய சபையில் உள்ளவர்களுக்கோ அல்லது அதில் இல்லாதவர்களுக்கோ அப்படிப்பட்ட வல்லமையை கர்த்தர் அளிக்கவில்லை. இப்படிப்பட்ட மக்கள் தாங்கள் கேட்பது இன்னது என்று அறியாமல் கேட்கிறார்கள்.

இதே மக்களில் பலர், அவர்களையும் அவர்களுடைய போதனைகளைக் கேட்பவர்களையும், இரட்சிக்க வேண்டுமென்று ஜெபத்தின் மூலம் கர்த்தரிடம் கேட்கின்றனர். நிச்சயமாக அவர்கள் கேட்பது என்னவென்று அறியாமல் கேட்கின்றனர். ஜெபத்தின் விளைவாக பாவத்திலிருந்து இரட்சிப்பு கிடைக்கும் என்று சுவிசேஷத்தில் எங்குமே கர்த்தர் கூறவில்லை. ஒரு தடவை ஒருவன் கிறிஸ்தவனாகி, பின் அவன் பாவஞ் செய்தால், அவனுடைய பாவம் மன்னிக்கப்பட, மனஸ்தாபப்படவும் ஜெபிக்கவும் தான், யாக்கோபு 5:16ம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், ஒருவன் தேவனுடைய பிள்ளையாக மாற, உலக முழுவதும் நற்செய்தி எடுத்துச் சொல்லப்பட்டு, சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டுமென்றும் "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:15,16) என்றும் கர்த்தர் கட்டளையிட்டிருக் கிறார்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தங்களுக்கு இருப்பதாக உரிமை கொண்டாடும் மக்கள், எழுதப்பட்ட வசனத்தின் மூலம், பரிசுத்த ஆவியானவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைக் கூட அறியாதவர் களாக இருப்பது வினோதமாக இல்லையா? இவர்களிடம் கர்த்தர் தனிப்பட்ட முறையில் இன்று ஏதோ செய்தி சொல்ல இருப்பதாக தாங்களே கற்பனை செய்து கொண்டு, கர்த்தர் தங்களிடம் பேச வேண்டுமென்று கூட ஜெபம் செய்து கொண்டிருக்கின்றனர். எனது நண்பர்களே! தேவன் பேசியிருக்கிறார்; அவர் பேசும்போது சொல்ல வேண்டிய சகலவற்றையும் சொல்லிவிட்டார். அதிகமாக அவர் சொல்ல விரும்பியிருந்தால், அவர் அப்படிச் செய்திருப்பார். ஆனாலும், அவர் ஏதாவது சொல்ல வேண்டியதிருந்திருந் தாலும், அது எல்லாருக்குமே தேவையான காரியமாகத் தான் இருக்கும். ஆனால், அவர் ஏற்கனவே சொல்லியிருப்பதற்கு விரோதமாக வேறு யாரிடமும் எதையும் நிச்சயமாக வெளிப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

எனது நண்பர்களே! ஏமாந்து போகாதீர்கள். நாம் தேவனிடம் கேட்க நமக்கு உரிமை உண்டு. ஆனால் அறியாமையால் அவ்விதம் செய்து, அவர் வாக்களிக்காதவைகளை நாம் அவரிடம் கேட்கக் கூடாது. மாறாக, கர்த்தர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதை அறிந்து, அவருக்குக் கீழ்ப்படிந்தால், நமது ஜெபங்களைக் கேட்டு அவற்றிற்குப் பதில் அளிப்பதாக கர்த்தரின் உறுதி நமக்கு உண்டு. என்றாலும் அவை அவருடைய விருப்பத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும். (1 யோவான் 5:14,15).

***J.C. சோட்***

பெண்கள் பகுதி

# ஸ்தோத்திரம் செய்கிறவர்களாயிருங்கள்

நன்றியில்லாதவர்களை எந்தவொரு மனிதனும் மெச்சிக் கொள்ள மாட்டான். தேவன் கூட நாம் நன்றியுள்ள மக்களாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக வேதாகமம் விளம்புகிறது. உண்மையச் சொன்னால், தேவன் நமக்கு செய்த அனைத்து செயல்களுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டுமென்று நமக்கு கட்டளையிடுகிறார்.

"தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படி, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது" (2கொரி. 4:15).

"இந்தத் தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்-திரிப்ப தினாலே சம்பூரண பலனுள்ள-தாயும் இருக்கும்" (2. கொரி. 9:12).

"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோட கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" (பிலி. 4:6).

2.கொரி. 4:15 கூறுகிறபடி ஸ்தோத்திரம் செய்வதின் மூலம் தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாக கிருபை பெருகுகிறது என்று பார்க்கிறோம். தேவனுடைய அளவற்ற கிருபைக்கும் நாம் நன்றி சொல்லுவதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

2.கொரி. 9:12 கூறுகிறது, ஸ்தோத்திரம் செய்வதின் மூலம் தேவனுடைய மகிமை விளக்குவதற்கேதுவாக கிருபை பெருகுகிறது என்ற பார்க்கிறோம். தேவனுடைய அளவற்ற கிருபைக்கும் நாம் நன்றி சொல்லு வதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

பிலி. 4:6ம் வசனம், இந்த ஸ்தோத்திரத்தை, விண்ணப்பத்திற்கும், வேண்டுதலுக்கும் இடையே இடைச்செருகல் செய்கிறது.

ஏன் தேவன், இந்த ஸ்தோத்திரம் செய்தலை இவ்வளவாய் சுட்டிக்காட்டி வலியுறுத்துகிறார்? இந்த ஒரு செயலின் மூலமாக அவர் நம்மேல் காட்டும் அளவில்லாத கிருபையை, எவ்வாறு குறைவுபட செய்கிறது.

தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்கே அவருக்கு நன்றி செலுத்தாமல், கொட்ட பிள்ளைகளைப் போல தொடர்ந்து அவரிடத்தில் கேட்டுக் கொண்டேயிருந்தோமானால் நாம் அவரை ஒருபோதும் பிரியப்படுத்தவே முடியாது. நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதையே தேவன் விரும்புகிறார். அவர் நம்மேல் பொழியப்போகும் அளவில்லா நன்மைகளை பெற, ஸ்தோத்திரம் செய்வதே உதவியாய் இருக்கும். எனவேதான், தேவன் இதைக் கட்டளையாகவும் கொடுத்துவிட்டார் என்று நான் எண்ணுகிறேன்.

எத்தனையோ முறை நாம் ஏதாவது ஒரு காரியத்திற்காக தேவனிடம் ஜெபிக்கிறோம், பெற்றுக்கொள்கிறோம். பிறகு மீண்டும் வேறொரு காரியத்திற்காக கேட்க ஆரம்பித்து விடுகிறோம். முதல் ஜெபம் கேட்கப் பட்டது என்பதை முழுவதுமாக மறந்துவிடுகிறோம். நாம் பிரயாணங்கள் மேற்கொள்ளும்போது சாலைகளில் நம்முடைய பிரயாணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்று ஜெபித்து பிரயாணத்தை ஆரம்பிக்கிறோம். ஆனால், மீண்டும் வந்தடைய வேண்டிய இடத்திற்கு வந்து சேர்ந்தவுடன் நாம் பயணித்த பாதுகாப்பான பிரயாணத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாமல் போய் விடுகிறோம். பெரும்பாலும் நாம் ஒவ்வொரு தேவைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கிக் கொண்டே போகலாம், இடையில் நம் ஜெபத்திற்காக கிடைத்த பதிலை கணக்கிலேயே வைக்காமல், தொடர்ந்து கேட்பது, கேட்பதிலேயே கவனமாயிருந்தது, தேவன் நம் ஜெபத்தைக் கேட்கிறாரா? என்ற சந்தேகத்திற்கு தள்ளப்படுகிறோம்.

நாம் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஜெபித்து பிறகு அந்த காரியத்திற்கு பதிலை நாம் பெற்றவுடன் இவருக்கு வார்த்தைகளால் ஸ்தோத்திரம் செலுத்திவிட்டு பிறகு எதிர்கால தேவைகளை அவர் சமூகத்தில் வைப்பது என்பது நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்த ஓர் அற்புதமான பயிற்சியாகும்!.

தேவன் நம்மை பாதுகாக்கிறார் என்ற அளவில்லா விசுவாசத்திற்கும், தேவைகளில் சிறந்த வழிகாட்டியாய் இருக்கிறார் என்கிற அளவில்லா நம்பிக்கைக்கும், பெற்றோரைப் போல அவர் நம்மீது வைத்திருக்கும் அன்பின் அளவில்லா நிச்சயத்திற்காகவும், கடந்த காலங்களில் அவர் செய்த உதவி, அவர் தந்த பாதுகாப்பு, மற்ற யாவுக்காகவும் நாம் நன்றியறிதலுள்ளவர் களாயிருப்பது எவ்வளவு அவசியமாய் இருக்கிறது.

ஆகவே, நாம் நம்பிக்கையோடும், நிச்சயத்தோடும் ஜெபிக்க வேண்டும். நேற்றைக்கு நம்மேல் அன்புவைத்து நம் ஜெபத்தை கேட்ட நமது தேவன் இன்றைக்கும் நம்மை நேசித்து நம் ஜெபத்தைக் கேட்பார். 1 யோவா 5:14,15ல் யோவான் கூறுகிறது போல் நாமும் உணர வேண்டும். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம் யோவானின் நம்பிக்கை இங்கு மிகப்பெரியதாய் இருக்கிறது. அவன் ஜெபம் செய்யும்பொழுது அதற்கான பதிலை, தான் ஏற்கனவே பெற்றுக்கொண்ட தாகவே நம்புகிறான். நமக்குக் கிடைக்குமென்று நமக்குத் தெரியும் கடந்த காலத்தில் தேவன் நமக்கு செய்த நன்மைகளுக்கு நன்றி சொல்லும்போது தொடர்ந்து நம்பிக்கையோடு தேவனிடத்தில் ஜெபிக்க அது உதவியாய் இருக்கிறது.

மிகவும் பரிதாபத்திற்குரியது என்னவென்றால், கிறிஸ்தவர்களால் ஏறெடுக்கப்படும் நல்ல ஜெபங்களுக்கு இல்லை என்ற பதிலே கிடைக்கிறது. அவர்களாகவே அதற்கு பதிலை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். ஏனென்றால்,

தேவன் தங்கள் ஜெபத்திற்கு பதில் கொடுக்கும்படி சந்தர்ப்பத்தை கொடுப்பதில்லை. அதெப்படி? யாக்கோபு 1:5-7ல் வாசிக்கிறோம். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரண மாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக் கடவன். சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கும் ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக.

சந்தேகமானது, தேவன் நம் ஜெபத்தை கேட்காதபடி அதைக் கொன்று விடுகிறது. இந்த சந்தேகத்தை நாம் மேற்கொள்ள ஒரே ஒரு வழி என்னவென்றால், நம் கடந்த கால வாழ்க்கையை திரும்பிப்பார்ப்பதும், தேவன் கடந்த காலத்தில் வைத்த கரிசனையையும் நம் ஜெபத்திற்கு கிடைத்த பதிலையும் நினைத்துப் பார்ப்பதும் தான். நாம் சற்று நின்று, பார்த்து பிறகு நம்முடைய தீர்மானங்களை வார்த்தைகளாக்கி, நம் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் உண்மையாகவே தேவனால்தான் நடந்தது என்று எண்ண வேண்டும். (மற்றபடி ஏதோ சந்தர்ப்பத்தினாலோ, பயத்தினாலோ ஏதும் நடக்கவில்லை) ஆக, அவர் நம்மேல் வைத்த செயல்திறன் கொண்ட பாதுகாப்பு, இவைகளுக்காக ஸ்தோத்திரம் செலுத்துவதன் மூலம் அவருக்கு பாராட்டு செலுத்துகிறோம். நாம் இவ்வாறு செய்யும் இந்த செயலே, நம்முடைய விசுவாசத்தை பெலப்படுத்துகிறது. அவர் இன்னும் கேட்டுக் கொண்டேயிருக்கிறார். அவர் நமக்கு உதவி செய்ய முன் வருகிறார்.

ஆகையால், நன்றியறிதலுள்ள குணத்தோடு இருப்பது, நமக்கு விசுவாசத்தை பெற்றுக்கொள்ள உதவி செய்கிறது. மேலும், நம்முடைய வாழ்க்கையில் நல்ல காரியங்களை முழு சுதந்திரத்துடன் செயல்பட தேவனை அனுமதிக்கச் செய்கிறது. நாம் அவருடைய உதவிக்காக காத்திருப்பது அவர் தமத சித்தத்தின்படி உதவி செய்வது ஆகிய இந்த கட்டளைகள் எவ்வளவு அழகாக ஒன்றோடொன்று இணைந்து காணப்பட்டு, எல்லாவற்றையும் கைகூடிவரச் செய்கிறது.

ஆகவே, கிறிஸ்துவுக்குள் அருமையான சகோதரிகளே, இதை வாசிக்கும் நீங்கள் ஸ்தோத்திரம் செலுத்துவது என்பது எவ்வளவு இன்றியமையாத ஒன்று என்று பாருங்கள். நாம் தேவனிடத்தில் பெற்ற ஒரு நன்மைக்கு ஸ்தோத்திரம் செலுத்தாவிட்டால், வேறொரு நன்மையை தேவனிடத்தில் எதிர்பார்க்க முடியாது.


ஒருவேளை, கடந்த ஆண்டுகளில் நாம் இந்த பழக்கமற்றவர்களாய் இருந்திருப்போமானால் இனிமேல் இந்த பழக்கத்தை தோன்றும் புதிய வருடத்தில் இருந்து கர்த்தர் நமக்கு செய்த ஈவுகளுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்த கற்றுக்கொள்வோம். ஏனென்றால் இது தேவனுடைய கட்டளை, கட்டளை என்பது கட்டாயம் செய்து முடிக்கப்படவேண்டிய ஒன்று.

எனவே ஸ்தோத்திரம் செலுத்துவதன் மூலம் அநேக நன்மைகளை தேவனிடத்தில் இருந்து பெற்றுக்கொள்ள அவர் நமக்கு உதவி செய்வாராக!

**B.B. CHOATE** **R.R. NAYAGAM**

சிறுவர் பகுதி

# பட்டாம்பூச்சிகள் அழகாக படைக்கப்பட்டவை



அன்புக்குழந்தைகளே, இந்த மாதமும் இந்த இதழின் வாயிலாக சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மாதந்தோறும் வெளிவரும் செய்திகள் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் நாம் பட்டாம்பூச்சிகள் பற்றி பார்க்கப் போகிறோம்.

தெரியுமா உங்களுக்கு? மொத்தம் 15,000 லிருந்து 20,000 வகையான பட்டாம்பூச்சிகள் இருக்கின்றன. இந்த பட்டாம்பூச்சிகள் வெவ்வேறு நிறங்களிலும் வெவ்வேறு அளவுகளிலும் காணப்படுகின்றன. அவைகள் ஆச்சரியமான விதத்தில் விதவிதமான வடிவங்களை கொண்டவை. அவைகளுக்கு நான்கு இறகுகள் உள்ளன. முன்பகுதியில் இரண்டும், பின் பகுதியில் இரண்டுமாக அமைக்கப்பட்டுள்ளது. அந்த இறகுகளில் அவைகளைத் தாங்கும்படி பல நரம்புகள் உள்ளன. அந்த நரம்புகள் காற்றடைக்கப்பட்ட நரம்புகள் ஆகும். எனவே தான் பட்டாம் பூச்சிகளால் சட்டென்று பறக்க முடிகிறது. தேவனால் மட்டுமே இந்த படைப்பை செய்திருக்க முடியும்.


தேவன் இவைகளுக்கு மற்ற மிருகங்களிடமிருந்தும், பறவைகளிட மிருந்தும் பாதுகாப்பதற்காக சில தற்காப்புகளை தந்துள்ளார். பட்டாம் பூச்சிகள் சில விஷச்செடிகளின் மீது அமர்வதினால் அந்த விஷம் அவைகளின் இரத்தத்தில் கலந்து பட்டாம்பூச்சிகளை விஷமுடையதாக்குகின்றன. ஆக, இவைகளை தீண்டும் எந்த மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் இவை இப்படியாக விஷமாகுகின்றன.

மேலும், அவைகள் மாரிகாலங்களில் தூங்கும்போது க்லைகால் என்ற ஒரு மதுவை பட்டாம்பூச்சியின் உடம்பு சுரக்கிறதாம். அதனால் மிகுந்த குளிராக இருந்தாலும் பட்டாம்பூச்சிகள் உறைந்து போகாமலிருக்கும்படி அது உதவுகிறது.

சில பட்டாம்பூச்சிகள் 2000 மைல் வரைக்கும் பறக்கும் திறன் கொண்டவை. என்ன மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதா? தேவனுடைய படைப்புகள் அல்லவா இவைகள்!! ஆம், ஒருவேளை, பரிணாம வளர்ச்சி உண்மையானால் இதுவெல்லாம் சாத்தியமல்ல. எனவே, அடுத்த தடவை நீங்கள் பட்டாம்பூச்சியை பார்க்கும்போது, சர்வ வல்ல நம் தேவனை துதிக்க மறவாதேயுங்கள். சிறுவர்களாகிய நம்மிடம் தேவனின் எதிர்பார்ப்பு மிகவும் அதிகம். எனவே, தேவனுக்கு மகிமை செலுத்தும் பட்டாம்பூச்சிகளை போல் நாமும் நம் கிரியை மூலம் தேவனை மகிமைப்படுத்துவோம்.

**R.A.R. NAYAGAM.**

## கண்டுபிடியுங்கள் - 2




<u>மேலிருந்து கீழ் :</u>

1. ஆனாத்தின் குமாரன் (4) (நியாய 3:31)
3. பராக்கிரமசாலி (4) (நியாயா 6:12,13)
5. இரட்சகன் (5) (நியா. 3:9)

<u>இடமிருந்து வலம் :</u>

2. கர்த்தரின் ஆசீர்வாதம் பெற்றவன் (4) (நியாய 13:24).
4. அன்னாளின் குமாரன் (4) (1சாமு. 1:20)

## இதையும் வட்டமிட்டுக் கண்டுபிடியுங்கள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| சா | பு | யா | த | வா | த | ங் | ரூ | மீகா |
| த | மு | மீ | சு | ரூ | ம | த் | ப | ரூத் |
| ம | ங் | வே | க | கி | யோ | ந் | ன | சாமுவேல் |
| பு | யோ | ரூ | ல் | ச | ங் | சு | கி | யோசுவா |
| ய | சி | ய் | யா | ய் | ட் | வா | வா | பிரசங்கி |
| ங் | கா | சி | பி | ர | ச | ங் | கி | ஓசியா |
| ஆ | ஓ | க | ர | ங் | ர | கி | கா | ஆகாய் |
| சி | மு | க | ங் | க | க் | மீ | கீ | யோபு |

**இதைக் கிழிக்காமல் தனித்தாளில் சரியான பதில் எழுதி அனுப்பவும். பரிசு உண்டு.**

வாலிபர் பகுதி

# வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறீர்கள் ...

வாலிப பிராயத்திலே கர்த்தரை சேவிக்கிற ஒவ்வொரு வாலிப உள்ளங்களுக்குத் தன் வாலிப வயதில் தன்னையே ஜீவ பலியாக ஒப்புக் கொடுத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே வாழ்த்துக்கள். ஒரு மனிதன் பிறந்தது முதல் அவன் மரிக்கிற வரைக்கும் அவனுடைய ஒவ்வொரு பருவத்திலும் அவன் எப்படி வாழ்ந்தால் நித்திய ஜீவனை பெறலாம் என்று திட்டமாக போதிப்பது நம்முடைய பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இப்படி போதிக்கிற வேதாகமம் வாலிப பருவத்தை குறித்து எச்சரித்தும் அந்த பருவத்தில் எப்படி நடந்தால் தன்னைக் காத்துக் கொள்ள முடியும் என்பதையும் போதிக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் உலகமானது அறிவியல் ரீதியில் நவீன யுகமாக மாறி இருப்பதால். வாலிபர்களுடைய பாவங்களும் இன்றைக்கு நவீனமாகவே மாறி இருக்கிறது. வாலிபர்களும் இன்றைக்கு தங்களை சாத்தானுக்கு ஒப்புக் கொடுத்து பாவ சந்தோஷங்களை மன நிறைவோடு செய்து கொண்டு இருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான்.

அநேக வாலிபர்கள் நான் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைக்கு ஒழுங்காக தான் செல்கிறேன் என்று சொல்கிறார்கள். ஆனால், மற்ற நாட்களில் கர்த்தரை நினைக்காமல் தங்கள் பாவ வாழ்க்கையை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் மட்டும் நீதிமான்களாக இருந்து மற்ற நாட்களில் அநீதிமான்களாக இருக்கிறார்கள். இதற்கு காரணம் என்னவென்றால் கர்த்தரைப் பற்றும் பயம் இல்லாததுதான். இதனால் தான் நீதி மொழிகள் ஆசிரியர் நீ நாடோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிரு (நீதி. 25:17) என்று எச்சரிக்கையோடு எழுதுகிறார். நாம் ஏன் நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடு இருக்க வேண்டும் என்று இக்கட்டுரையின் மூலம் கற்றுக்கொள்வோம்.

## I ***பொல்லாத உலகமாக இருக்கிறது***

இந்த உலகத்தில் தற்போது ஏற்பட்டு இருக்கிற அறிவியல் முன்னேற்றத்தால் நாம் சௌரியமாக வாழ்ந்தாலும் இந்த உலகம் இன்னமும் இருளின் அதிகாரத்தில் (கொலோ 1:13) இருக்கிறது என்று நம்முடைய வேதாகமம் போதிக்கிறது. அதோடு மாத்திரம் அல்ல மனுஷருடைய கிரியைகளும், பொல்லாதவைகளாக இருக்கிறது (யோவா 3:19) என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் எச்சரித்துள்ளார்.

ஆகையால், வாலிபர்களே இந்த உலகத்தில் பாவத்தோடும், பொல்லாங்கனாகிய பிசாசோடும் நமக்கு போராட்டங்கள் இருக்கிறது. அவனை நாம் ஜெயிக்க வேண்டும் மேலும் வசனம் "பிசாசானவன் எவனை விழுங்கலாமோவென்று கெர்ச்சிக்கிற சிங்கம் போல சுற்றித்திரிகிறான்" (1பேது 5:8) என்கிறது. ஆனால், வாலிபர்களாகிய நாம் கவனிக்க வேண்டிய விசயம் என்னவென்றால் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்கள் பொல்லாங்கனாகிய சாத்தானை ஜெயித்திருக்கிறார்கள் யோவான் ஆசிரியர் எழுதுவதை கவனியுங்கள். "வாலிபரே பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன்" (1யோவா. 2:13) என்கிறார். அருமையான வாலிபர்களே முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தில் வாழ்ந்த வாலிபர்களே பொல்லாங்கனை ஜெயித்திருக்கிறார்கள் என்றால் நாம் ஏன் ஜெயிக்க முடியாது.

மேலும் யோவான் ஆசிரியர் வாலிபர்களை பார்த்து "வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன் (1 யோவா 2:14) என்கிறார் பாருங்கள் அவர்கள் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களால் சாத்தானை எதிர்த்து ஜெயித்து பலவான்களாக மாற முடியும் என்றால் நம்மால் ஏன் முடியாது, நாம் சாத்தானை ஜெயிக்க வேண்டுமென்றால் "நாள்தோறும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்" (நீதி. 23:17) அதைக் குறித்து நாம் சற்று விரிவாக பார்ப்போம்.

## II ***நமக்குள் இருக்க கூடிய பயம்***

அநேக வாலிபர்களுக்கு இருக்க கூடிய பிரச்சனை தங்களுக்குள்ளாகவே எல்லா விசயத்திலும் பயந்து கொண்டு இருப்பதுதான் அதாவது, தங்களுக்குள் இருக்கக் கூடிய தாழ்வு மனப்பான்மையின் காரணமாக பயப்படுவது, தங்களுக்குள் திறமை இல்லையோ, அழகு இல்லையோ என்ற மனப்பான்மையை வைத்துக்கொண்டு பிறரிடத்தில் பேசுவதற்கே பயப்படுவார்கள் அதில் மற்றொரு வகை என்னவென்றால் தவறு அல்லது பாவம் செய்கின்றபோது அதினிமித்தமாக பயப்படுவது, ஆதாம் பாவம் செய்த போது அவன் பயந்து ஒளிந்து கொண்டான் (ஆதி. 3:10) என்று வேத வசனம் கூறுகிறது.

இயேசு கிறிஸ்து கடலில் தண்ணீர் மீது நடந்தபோது பேதுரு பார்த்து தானும் நடக்க வேண்டும் என்று விருப்பப்பட்டு இயேசு கிறிஸ்துவின் அனுமதியோடு கடலில் நடந்தபோது திடீரென கடலுக்குள் அமிழ்ந்து போனான், ஏன் என்னவென்று நாம் பார்க்கின்றபோது வசனம் சொல்லுகிறது. "பேதுரு பயந்து அமிழ்ந்து போனான்" (மத். 14:30) என்கிறது. ஆகையால் நமக்குள் பயம் வருகிறது என்றால் நாம் பாவம் செய்திருப்போம் அல்லது அவிசுவாசிகளாக இருப்போம்.

ஆகையால், வாலிபர்களே நமக்குள் இருக்க கூடிய பயத்தை நாம் விரட்டியடிக்க வேண்டும் "தேவன் நமக்கு பயமுள்ள ஆவியை கொடாமல் பலமுள்ள ஆவியை கொடுத்து இருக்கிறார் (2 தீமோ 1:7) ஆகையால், நாம் பலமுள்ளவர்களாக இருப்போம்.

### III *மற்றவர்கள் மேல் இருக்க கூடிய பயம்*

நமக்கு இருக்க கூடிய மற்றொரு பிரச்சனை மற்றவர்களை பார்த்து பயப்படுவது, அதாவது மற்றவர்களின் தோற்றத்தை பார்த்தோ அல்லது அவர்களுடைய திறமையை பார்த்தோ அவர்களிடத்தில் பேசுவதற்கே பயப்படுவது, இதற்கும் காரணம் நமக்குள் இருக்க கூடிய தாழ்வு மனப்பான்மைதான்

இப்படிப்பட்ட பயம் இருக்கக் கூடிய வாலிபர்கள் தங்களுடைய வாழ்க்கையிலும் கிறிஸ்தவ ஜீவியத்திலும் முன்னேற்றம் காண்பது என்பது முடியாத காரியம் ஆகும். அநேக வாலிபர்களுக்கு சபையில் நடத்துனர் பகுதியோ அல்லது ஜெபமோ, வேத வாசிப்பின் பகுதியோ கொடுக்கும்போது ஒன்று எங்களால் முடியாது என்பார்கள் அல்லது சபைக்கு முன்னால் பேசுகின்ற போது நடுக்கத்தோடு உளற ஆரம்பித்து விடுவார்கள்.

இதற்கெல்லாம் என்ன காரணம் மற்றவர்கள் மீது இருக்க கூடிய பயந்தான் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி செங்கடலுக்கு முன்பாக இருக்கும்போது "எகிப்தியர் தங்களுக்கு பின்னே வருகிறதை கண்டு மிகவும் பயந்தார்கள்" (யாத். 14:16) என்கிறது. இதற்கு என்ன காரணம் கர்த்தரிடத்தில் பயம் இல்லாமல் போனதுதான் இப்படியாக அநேக உதாரணங்களை நம்முடைய வேதாகமம் சொல்லிக்கொண்டே போகிறது. நமக்கு நாமே பயப்படுவதும் பிறரிடத்தில் தேவையில்லாமல் பயப்படுவதும் கோழைதனமானது. யோவான் எழுதின வெளிப்படுத்தின விசேஷத்தில் பயப்படுகிறவர்கள் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவார்கள் (வெளி. 21:8) என்று எச்சரிக்கையோடு எழுதுகிறார்.

### IV *கர்த்தர் மேல் இருக்கக் கூடிய பயம்*

வாலிபர்களாகிய நம் ஒவ்வொருவருக்கும் பயம் இருக்க வேண்டும் அது யார் மீது என்றால் நம்முடைய கர்த்தரின் மீது தான், அவருக்கு பயந்தால் தான் நம்முடைய வாழ்க்கை ஆசீர்வாதமாக இருக்கும், நீதிமொழிகள் ஆசிரியர் எழுதும் போது கர்த்தருக்குப் பயப்படுதலே ஜீவ ஊற்று (நீதி. 14:27) என்று எழுதுகிறார்.

மேலும் அந்த ஆசிரியர் எழுதும் போது நாம் கர்த்தருக்குப் பயப்படுகிற போது நமக்குள் திட நம்பிக்கை உண்டாகிறது (நீதி. 14:26) என்றும் எழுதுகிறார். ஆகையால், அருமையான வாலிபர்களே "நாம் ஒவ்வொரு நாளும் கர்த்தரைப் பற்றும் பயத்தோடிருக்க வேண்டும்" (நீதி. 23:17)

தானியேல் தீர்க்க தரிசன புஸ்தகத்தில் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்கிற வாலிபர்கள் நேபுகாத்நேச்சாரின் கட்டளைக்கு பயப்படாமல் அக்கினிக்கு தங்களை ஒப்புக் கொடுக்கவும் ஆயத்த மாயிருந்தார்கள் என்பதை நாம் மறுக்க இயலாது. (தானி. 3:18).

இந்த வாலிபர்களின் விசுவாசம் மகத்தானது ஆகும். "தேவன் எங்களை அக்கினிச் சூளையிலிருந்து விடுவிக்காமற் போனாலும், நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை" (தானி. 3:18) என்று தைரியத்தோடு சொன்னார்கள். இதற்கு என்ன காரணம் அவர்கள் ராஜாவுக்கு பயப்படாமல் கர்த்தருக்கே அதிகமாக பயந்திருக்கிறார்கள் மேலும் இயேசு கிறிஸ்து சொல்வதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். "சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம் ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத். 10:28) என்று அறிவுறுத்துகிறார்.

ஆகையால், கிறிஸ்துவுக்கு பிரியமான வாலிபர்களே உங்களுக்குள் இருக்க கூடிய பயத்தையும் மற்றவர்கள் மேல் இருக்க கூடிய பயத்தையும் நீங்கள் முழுவதுமாக விட்டு உங்களை உண்டாக்கி இரட்சித்த நம்முடைய கர்த்தருக்கே நீங்கள் அனுதினமும் பயந்து நடங்கள், சாத்தானை ஜெயித்து பலவான்களாக இருங்கள் தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்!

**N. பர்னபாஸ்,** திருப்பூர்.

## நாளும் நடப்பும்

1. **சைபீரியாவில் உள்ள அல்டாய் பகுதியில் அறுவை சிகிச்சை மூலம் பிறந்த குழந்தையின் எடை 7.75 கிலோ இருந்தது.**
2. **மெக்ஸிகோவை மணிக்கு 130 கி.மீ. வேகத்தில் லாரன்ஸோ என்ற சூறாவளி தாக்கியது.**
3. **மீண்டும் பாகிஸ்தான் அதிபராகிறார் முஷரப் - வாக்குப்பதிவை புறக்கணித்தன எதிர்கட்சிகள்.**
4. **பசுபிக் கடலில் 3 இடங்களில் பூகம்பம். ஆஸ்திரேலியாவில் சுனாமி எச்சரிக்கை.**
5. **நவம்பர் 1-ல் சேலம் ரயில்வே கோட்டம் - தமிழக முதல்வர் தொடங்கி வைக்கிறார்.**
6. **டுவென்டி 20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்று கோப்பையை கைப்பற்றியது.**

# சபை கூடிவருதலை சிலர் ஏன் விட்டுவிடுகிறார்கள்?

"சபைக்கூடுதல்" என்பதை "தேவ சமூகம்" என்றும் சொல்லலாம், "அவர்கள் மத்தியில் நான் இருப்பேன்" என்ற வாக்குத்தத்தம் இதை உணர்த்துகிறது. ஒருவர் தனிப்பட்ட முறையில் எவ்வளவு பக்தி வைராக்கியம் உள்ளவராய் இருப்பினும் **தேவனை மகிமைப்படுத்தவும்**, தேவ சமூகத்தை உணர்ந்து **உள்ளான மனுஷனில் வளரவும், ஆத்துமாவில் தொடர்ந்து ஜீவனோடு இருக்கவும்** "சபைக்கூடுதல்" மிகவும் அவசியமாகிறது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சபைக்கூடுதலை சிலர் விட்டு விடும்போது நாம் அவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும் (எபி. 10:25) நம்முடைய சொந்த புத்திமதிகள் ஒன்றுக்கும் உதவாது. வேதவசனங்களின்படி மட்டும் நாம் போதிக்க வேண்டியிருப்பதால் அவைகளைச் சற்று தியானிப் போம். வேதவசனங்களைப் புரிந்து கொள்ள தேவன் தாமே நமக்குக் கிருபைச் செய்வாராக.

**1. அழைப்பை அசட்டைப்பண்ணுதல் :-** "சபை" என்பது அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள்படும். யாரால் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்? நம்முடைய பிதாவாகிய தேவனால் எதற்காக? அவருடைய குமாரன் கிறிஸ்துவுடன் ஐக்கியமாயிருக்க (1கொரி 1:9) ஒரு கன்னிகை எல்லாத்தகுதியும் உள்ள ஒரு புருஷனுக்கு கீழ்படியாவிட்டால் அது எவ்வளவு துரோகமோ அதைவிட துரோகம் கிறிஸ்துவினால் பாவ மன்னிப்பு பெற்று சபைக்கூடி வராமல் இருப்பது! மத்தேயு 22ம் அதிகாரத்தில் தன் குமாரனுக்கு கலியாணஞ் செய்த ராஜாவுக்கு அழைக்கப்பட்டவர்கள் வர மனதில்லாதிருந்தனர், சாக்கு போக்கு சொன்னது எவ்வளவாய் தண்டனைக் குரியது? ஒரு ராஜாவின் மூலமாகத்தான் குடிமக்கள் பாதுகாப்பு, போஷிப்பு போன்றவை பெறுவதால் அழைப்பை அசட்டை செய்வது தண்டனைக்குரிய தாகிறது. சபைக்கு வராமல் ஒருவர் சொல்லும் எந்த சாக்கு போக்கும் தண்டனைக்குரியதே! (எபி. 10:29).

**2. அவிசுவாசம் :** இஸ்ரவேலர் கானானைக் குறித்துக் கேள்விப்பட்ட போது அவிசுவாசத்தினால் அதில் பிரவேசிக்க முடியவில்லை. சபை விசுவாசிகளின் மத்தியிலும் சில நேரம் இந்த விசுவாசக்குறைவே சபை கூடிவருதலை விட்டுவிடச் செய்கிறது. ஆதலால் நம்மில் நிற்கிறேன் என்று எண்ணுகிறவன் விழாதபடி எச்சரிப்பாக இருக்கவும், ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கு ஏதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் நம்மில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கும் தேவன் நம்மை எச்சரிக்கின்றார். சீஷர்கள் விசுவாசத்தில் குறைவுபட்டபோது ஆண்டவர் அவர்களை "அற்ப விசுவாசிகளே" என்று கடிந்து கொண்டார். நாமும் நம் விசுவாசத்தில் தளர்ச்சி யடையாமல் சபைக்கூடுதலை விட்டுவிடாதிருப்போமாக (எபி. 11:6).

**3. இம்மைக்காக மாத்திரம் நம்பிக்கை :** - சபை என்பது நித்தியத்திற்கு உரியது - சபையார் உலக வாழ்வை விட பரலோக வாழ்வை மேன்மையாக எண்ண வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம். ஆனால் சிலர் சபைக்கு வந்தால் சரீரப்பிரகாரமான சில நன்மைகள் கிடைக்கிறது என்றும் சபையார் ஜெபித்தால் வியாதிகள், வராத பணம் போன்றவற்றிற்கு நிவாரணம் கிடைக்கிறது என்பதற்காகவும் சபைக்கூடி வருகிறார்கள். அது கைக்கூடாமல் போனால் சபைக் கூடுதலை விட்டுவிடுகிறார்கள். இது மிகவும் பரிதாபமானது என்று வேதம் கூறுகிறது (1 கொரி 15:19).

**4. மனச்சோர்வு :** பொதுவாக நல்லவர்களாக வாழ்வதே உலகத்தில் ஒரு சோர்வைத்தான் உண்டாக்குகிறது. நல்லதுக்கு காலமில்லை எனும் புதுமொழியும் இதனால் தான் உருவானது. உலகம் நல்லவர்களை ஏளனம் தான் செய்கிறது. ஆனால், தேவன் நல்லவர்களின் தேவனாய் இருக்கிறார். அதனால்தான் அவர் ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவனாய் அழைக்கப்படுகிறார். ஆகவே நன்மை செய்வதில் சோர்ந்து போகாதிருங்கள், ஜெபம் பண்ணுவதில் சோர்ந்து போகாதிருங்கள், சகோதர சிநேகத்தில் நிலைத்திருங்கள், உலக சிநேகத்தை வெறுத்து சபைக்கூடுதலை விட்டு விடாதிருங்கள். ஆரம்பத்தில் கொண்ட நம்பிக்கையை நாம் முடிவு பரியந்தமும் உறுதியாய் பற்றிக்கொள்வோம் (எபி. 3:14).

**5. உபதேசத்தை அசட்டை பண்ணுதல் :** - பிள்ளைகளை நல்ல பள்ளிக் கூடம் என்பதற்காக தூரத்தில் சேர்க்கும் பெற்றோர் நல்ல பொருளை பெறுவதற்காக நேரம், பணம், உழைப்பு எல்லாம் செலவு செய்ய தயங்காத மனிதன் தேவனை வணங்கும் விஷயத்தில் இன்னமும் தற்குறியாக ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவனாக இருப்பது வேதனைக்குரிய விஷயமாகும். தேவனுடைய ஆவியால் ஏவப்பட்டு எழுதப்பட்ட வேதாகமத்தை பத்தோடு பதினொன்றாக நினைப்பதும், அல்லது அதை புரிந்து கொள்ள வேண்டிய விதத்தில் பகுத்து தெரிந்துகொள்ளாமலும் அதிலுள்ள பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு வித்தியாசம் தெரியாமல், ராஜ்யமாகிய சபையைப்பற்றி அறிந்து கொள்ளாமல் இன்றைக்கு உலகில் தான் எத்தனை, எத்தனைப் பிரிவினைகள். ஆனால், **"கிறிஸ்துவின் சபை"** பத்தோடு பதினொன்று அல்ல அது தேவனால் திட்டமிடப்பட்டு, கிறிஸ்துவின் சொந்த ரத்தம் சிந்தி, அழியாத அவருடைய சபைக்கு கிறிஸ்துவே தலைவராய் இன்றும் ஆட்சி செய்கிறார். இதிலிருந்து, இந்த உபதேசத்தில் இருந்து ஒருவர் விலகினால் அது தாய்க்கோழியினிடமிருந்து விலகியோடும் கோழிக்குஞ்சு ஆபத்தை சந்திப்பதைப் போல் தான் (மத். 23:37).

**6. மனமேட்டிமை :** - பொதுவாகவே மனிதனுக்கு தான் ஒரு ஞானி என்ற எண்ணம் உண்டு. போதாக்குறைக்கு அவன் சற்று படித்துவிட்டாலோ கேட்கவே வேண்டாம். இன்றைக்கு மனிதர்கள் தங்கள் ஞானத்தைக் குறித்தும், பராக்கிரமத்தைக் குறித்தும், ஐசுவரியத்தை குறித்தும் மேன்மை பாராட்டு வதைக் காண்கிறோம். கிறிஸ்துவுக்கு சுமார் 600 வருடங்கள் முன்பாகவே

எரேமியா தீர்க்கதரிசி மூலமாக தேவன் இவைகளைக் கண்டிப்பதைப் பாருங்கள் (எரே 9:23,24) ஆக உண்மை தேவனை அறிந்து கொண்டதற்காக மட்டுமே நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். சகவிசுவாசிகளை நாம் நம் சகோதரர்களாக அன்பு கூர்ந்து நம்மை விட மேன்மையானவர்களாக எண்ண வேண்டும் (1 கொரி 4:7).

**7. கீழ்ப்படியாமை :** இக்குணம் பிசாசின் அடிப்படை குணமாக உள்ளது. நம்முடைய மாம்ச பெலவீனங்களை உணராமல் அல்லது அவைகளை விரும்பும்போது தேவனுடையக் கட்டளைகளுக்கு கீழ்படியக்கூடாமல் போகிறோம். ஆனால், இது மிகவும் ஆபத்தானது சாலை விதிமுறைகளை மீறி விபத்தில் சாகிறவர்களை நாம் அனுதினமும் தொலைக்காட்சியிலும், செய்தித்தாள்களிலும் காண்கிறோம். தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்படியாத ஆத்துமாக்களும் இதைப்போன்ற கோர விபத்தில் சிக்கி காயப்பட்டு மரணத்திற்கேதுவாக கிடக்கின்றன. சாலையில் மரித்த உயிர் திரும்ப வராது. ஆனால், ஆத்துமாவில் மரண அடிவாங்கியிருந்தாலும், சபை கூடிவருதலில் கலந்து கொண்டு தேவனிடம் நம் பாவங்களாகிய கீழ்படியாமையை அறிக்கை செய்து விட்டு விட்டு அவருடைய குமாரனுடைய பந்தியின் மூலம் நித்திய ஜீவனாகிய ஆசீர்வாதத்தை பெறுவதே தேவ இரக்கமாயுள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் மன்னிப்பு இல்லை. சபை கூடிவருதலை விட்டு விடாமல் இருப்பதே கிறிஸ்துவின் நியாயஸ்தனத்தில் தப்பிக்கொள்ள ஒரே வழியாகும் (எபி. 10.:22:27).

ஆகவே, சபை கூடுதல் என்பது ஒவ்வொரு தனி மனிதனுக்கும் கிடைத்த மிகப் பெரும் பாக்கியமாகும். அங்கு மட்டுமே நம் ஆத்தும ஆகாரம், ஆவிக்குரிய ஞானம், தேவனோடு மற்றும் சகோதர ஐக்கியம், மனதுக்கு பூரண சமாதானம் ஆகியவை கிடைக்கும். தேவன் தாமே சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கிற ஒரு இடமாக கிறிஸ்துவின் சபை கூடுதல் இருக்கிறது. ஆமென்.

**K. பாண்டியன்,** பாண்டிச்சேரி

## இயேசு கிறிஸ்து பூமியில் மனுஷனாக பிறக்கக் காரணம்

1. பிசாசின் வல்லமையை அழிப்பதற்காக (எபி. 2:14)
2. மரண பயத்தை நீக்கும்படியாக (எபி. 2:15).
3. பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக்கும் படியாக (1 யோவா 2:2)
4. சோதனையில் உதவி செய்யும்படியாக (எபி. 2:18)
5. பாவிகளை இரட்சிக்கும்படியாக (லூக்கா 19:10)

# சாறிபாத் ஊர் விதவையும், குஷ்டரோகி நாகமானும்

திருமறை ஆசான் வாசகர்களாகிய உங்கள் ஒவ்வொருவரையும் நித்திய ஜீவ வசனங்களையுடைய இயேசு கிறிஸ்துவின் அன்பான நாமத்தில் வாழ்த்துகிறோம். சுகமாய் இருப்பீர்களாக.

அன்பிற்குரியவர்களே சாரிபாத் ஊர் விதவைக்கும் சீரியாவின் படைத்தளபதி நாகமானுக்கும் மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம். ஆனால், நம் ஆண்டவர் (லூக்கா 4:24-30) இந்த இருவரையும் உதாரணம் காட்டிப் பேசுகிறார். அப்படியானால் நமக்கு இந்த இருவரும் அமையான பாடங்களை கற்றுத்தரப்போவது நிச்சயம்.

**1. சாறிபாத் ஊர் விதவை:** Iராஜா 11:30-34 சாலமோனுக்கு பிறகு அவரது குமாரன் ரெகோபெயாமின் நாட்களில் இஸ்ரவேல் ராஜ்ஜியம் இரண்டாகப் பிரிந்தது 10 கோத்திரம். (யெரோபெயாம்) வடக்கு ராஜ்ஜியம் 2 கோத்திரம் (ரெகோபெயாம்) தெற்கு ராஜ்ஜியம் எனப்பிரிந்தது. வடக்கு ராஜ்ஜியத்தில் ஆளுகை செய்த யெரோபெயாம் (தாண், பெத்தேல்) பொன் கன்றுக்குட்டிகளை உண்டாக்கினான் (யாத். 32:28) சீனாய் மலை அடிவாரத்தில் இதே ஜனங்களில் ஈனமானவர்களை ஆசாரியர்களாகத் தெரிந்து கொண்டான் (1ராஜா 12:25-33) இஸ்ரவேலில் இவனுக்குப் பின்பு வந்த ராஜாக்களும் ஒருவரை ஒருவர் மிஞ்சுகிற அளவு போட்டி போட்டுக் கொண்டு பாவம் செய்தனர். (எரேமியா 4:22) இவர்கள் பொல்லாப்புச் செய்ய அறிவாளிகள், நன்மை செய்யவோ அறிவில்லாதவர்கள்.

இந்த நிலையில் தான் மனம் நொந்துபோன எலியா தேசத்தில் மழை பெய்ய வேண்டாம் என்று தேவனிடம் ஜெபித்தார். (யாக்கோபு 5:17-18) அந்தப்படியே தேசத்தில் மூன்று வருஷமும் ஆறுமாதமும் மழையில்லாமல் இருந்தது. இந்த மக்களுக்கு நம் ஜனங்கள் கொஞ்சமும் சளைத்தவர்கள் அல்ல அறுவடை முடிந்து உடனே முதல் தானியத்தை கொண்டு போய் விக்கிரகங்கள் முன்பு படையல் போட்டால் ஒழிய தூக்கம் வருவதில்லையே!

தேசத்தை மழையில்லாமல் வருத்தினாலும் தமது வார்த்தையை கைக்கொள்கிற தாசர்களை அவர் கைவிடுவதில்லையே! தேவன் அப்போது தான் (1ராஜா 17:7-15) எலியாவை நோக்கி நீ சீதோனுக்கடுத்த சாரிபாத் ஊருக்குப் போ. அங்கே உனக்காக ஒரு விதவையை கட்டளையிட்டிருக் கிறேன் என்றார்.

**2. விதவையின் நிலை :-** மிகவும் ஏழை, ஒரு மகன் இருந்தான், உறவினர்கள் கை விட்ட நிலை. ஒருநேர உணவை ஆயத்தப்படுத்த விறகு பொறுக்க ஒலிமுக வாசலுக்கு வந்திருந்தால். தேவனுடைய மனுஷன் முதலில் தண்ணீர் கேட்கிறார். பிறகு ஒரு சிறு அடையை செய்து வரும்படி கூறுகிறார்.

அந்த விதவைத்தாய், பானையில் ஒருபிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணெய் மட்டுமே இருக்கிறது நாங்கள் அதைசாப்பிட்டு பின்பு செத்துப் போகப்போகிறோம் என்றாள் என்ன ஒரு பரிதாபமான நிலை பார்த்தீர்களா? ஆனாலும் என் வார்த்தையின்படி முதலில் ஒரு சிறு ஆடையை எனக்கு செய்து வா கர்த்தர் தேசத்தில் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் குறைவு வராது என்றார் எலியா. நடந்தது என்ன?

**B) கீழ்படிந்ததால் வந்த ஆசீர்வாதம் (1ராஜா 17:13-15) :** அவள் போய் எலியாவின் வார்த்தையின்படியே செய்தாள். அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள். ஒரு சிறிய கீழ்படிதலுக்கு எவ்வளவு பெரிய ஆசீர்வாதம் பார்த்தீர்களா? பிரியமான வர்களே (யோவா 12:48) வார்த்தைகள் தான் வாழ்வளிக்கும். ஒரு வேளை அந்த விதவை கீழ்படியாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும். சிந்தியுங்கள் கீழ்ப்படிதல் எத்தனை நன்மையானது

**2. படைத்தளபதி நாகமான் :** (2 ராஜா 5:1-15) இந்த மனிதன் ஒரு பெரிய நாட்டின் படைத்தலைவன் (சீரியா). ராஜாவிடம் நல்ல மரியாதை ஆனால் குஷ்டரோகி (லேவியராகமம் 13:44-46) தேவனுடைய ஜனங்கள் பழைய ஏற்பாட்டின் நாட்களில் இப்படிப்பட்டவர்களை ஊருக்குள் அனுமதிக்கமாட்டார்கள். வெளியேதான் இருக்க வேண்டும். இந்த குஷ்டரோகத்தை நம்முடைய பாவங்களுக்கு உதாரணமாக வைத்துக் கொள்வோம் (கலாத்தியர் 5:19-21).

உண்மையைச் சொன்னால் குஷ்ட ரோகத்தின் நாற்றத்தை விட நம்முடைய பாவங்களின் நாற்றமே அதிகமாய் இருக்கும் (1யோவா 1:9, யோவா 1:29, 1பேது 1:18,19).

**A) சுகத்திற்கான விலை :** 2 ராஜா 5:1-3. நாகமான் சமாரியாவில் உள்ள எலிசா தீர்க்கதரிசியிடம் சென்றார். 1 சிபாரிசு கடிதம் 2. பத்து தாலந்து வெள்ளி 3. 6000 சேக்கல் நிறைய பொன் 4. பத்து மாற்று வஸ்திரங்கள் இவைகள் எதற்கு எலிசா இவைகளைப் பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக இவரது குஷ்ட ரோகத்தை சுகப்படுத்த வேண்டுமாம். இது நாகமானின் எண்ணம். ஆனால், இந்த செல்வங்கள் ஒன்றும் நம் பாவங்களை நீக்கும்படி தேவனுக்கு தேவையில்லை (சங்க 24:1, சங். 50:9-12) செல்வங்கள் யாவும் தேவனுடையது.

**2. நாகமானின் எண்ணம் :** எலிசா வெளியே வந்து தன் குஷ்டரோக முள்ள சரீரத்தை தொட்டு ஜெபிக்கவும் சுகமாக்கவும் வேண்டுமென நாகமான் எதிர்பார்த்தார். அதற்காக இன்னும் ஒரு மடங்கு காணிக்கை கூட தர தயார் நிலையில் இருந்தார். ஆனால், தேவனுடைய நினைவுகள் வேறு விதமாய் இருக்கிறது. (ஏசா 55:8) (எரே 13:8) கர்த்தர் எலியாவைக் கொண்டு நாகமானுக்கு நீ, போய் யோர்தானில் ஏழுதரம் முழுகு அப்பொழுது சுத்தமாவாய் என்றார். முதலில் மறுத்து பிறகு கீழ்படிந்து சுகமானார்.

**3. நம் சிந்தனைக்கு :** ஒருவேளை நாகமான் வேறு ஒரு நதியில் (பர்பா) ஏழு தடவை அல்லது பத்து தடவை முழுகுகிறார். என்ன நடந்திருக்கும்? அல்லது யோர்தானிலேயே மூன்று முறை மட்டுமே முழுகிறார் என்று வைத்துக்கொள்வோம் என்ன நடந்திருக்கும். கண்டிப்பாக குஷ்டரோகம் நீங்கி இருக்காது.

அப்படியானால் சுகம் எங்கே இருந்தது யோர்தானின் தண்ணீரில் இல்லை. தேவனுடைய வார்த்தையில் தான் இருக்கிறது. 1 சாமு 5:22 கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்படிவதை விட பலிகளும், காணிக்கைகளும் பிரதானமல்ல (சங்கீதம் 51:17) தேவனுக்கு ஏற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். பிரியமானவர்களே (1) விதவை ஏழை என்பதற்காக தேவன் எளிமையான கட்டளையும் (2) நாகமான் பணக்காரன் என்பதற்காக கடினமான கட்டளையும் தேவன் தரவில்லை. அல்லது யாருக்கும் சலுகையும் காட்டப்படவில்லை.

**1. கட்டளைகள் எளிமையானது :** 1 யோவான் 5:3 நாம் தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்வதே அவரிடம் அன்பு செலுத்துவதாகும். அவரது கற்பனைகள் பாரமானவைகளல்ல

1. கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்கள் (கலா. 3:26-27) (அப். 11:26) கிறிஸ்தவர்கள் என அழைக்கப்படுவது கடினமானதா?
2. எபேசியர் 5:23 கிறிஸ்து தலைவராக உள்ள அவரது சபையை (ரோமர் 16:16) கிறிஸ்துவின் சபை என்றழைப்பது கடினமானதா?
3. (மத். 26:26-28) அப். 20:7 கிறிஸ்து உயிர்த்தெழுந்த வாரத்தின் முதல் நாள் தோறும் அப்பம், திராட்ச ரசத்தில் பங்கு பெறுவது கடினமான கட்டளையா?
4. யோவா 17:20-23 கிறிஸ்து தேவனிடம் நாமெல்லாரும் ஒற்றுமையாக (ஒரே சபையாக) இருக்க ஜெபித்தாரே அது கைக்கொள்ள முடியாத அளவு கடினமான கட்டளையா?

சிந்தித்து செயல்படுவோம்!

**S. பிச்சைமுத்து,** தூத்துக்குடி.

## வானம் திறக்கப்பட்ட சம்பவங்கள்

1. **இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது திறக்கப்பட்டது (மத். 3:16)**
2. **ஸ்தேவானின் மரணத்தின் போது திறக்கப்பட்டது (அப். 7:56).**
3. **பேதுரு யோப்பா பட்டணத்தில் தரிசனங்காணும் போது திறக்கப்பட்டது. (அப். 10:11)**
4. **பவுல் கூறிய மனிதன் மூன்றாம் வானம் வரை எடுத்துக் கொள்ளப்பட்டபோது திறக்கப்பட்டது (2 கொரி. 12:2)**

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் - 3. பேதுரு இரத்த சாட்சியாகக் கொல்லப்படுதல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று பலமாய் சாட்சிக் கொடுத்து, யூதரின் ஆலோசனை சங்கத்தாரை அதிரச் செய்தார். பேதுருவின் மகா தைரியத்தைக் கண்டு அநேகர் கலங்கினார்கள் (அப். 12:18) பேதுருவைக் குறித்து படிக்கும்போது சபையைக் குறித்தும் அறியாமல் இருக்கக்கூடாது. ஏனெனில் நம்மில் அநேகர் சபையானது பேதுருவின் மேல் கட்டப்பட்டதாக நம்புகின்றனர்.

**I சபை பேதுருவின் மேல் கட்டப்பட்டதா?**

இயேசுவானவர் பிலிப்பு, செசரியாவின் திசைகளில் வந்தபோது தம்முடைய சீஷரை நோக்கி மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், சிலர், உம்மை யோவான் ஸ்நானகன் என்றும், சிலர் எலியா என்றும் வேறுசிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர் நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு முதல் அப்போஸ்தலன் (முந்தினவன்) எனவே நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று பலமாய் அறிக்கையிட்டான் (மத். 16:13-16). இயேசு அவனை நோக்கி யோனாவின் குமாரனாகிய சீமோனே நீ பாக்கியவான் மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். அதாவது, இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்ற அறிக்கையை தேவனே வெளிப்படுத்தினார் என்று இயேசு கூறுகிறார். இங்கு மாம்சமும் இரத்தமும் உடையவராக இருக்கும் பேதுரு முக்கியமாக இராமல் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதே முக்கியமானதாக உள்ளது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் இயேசு கிறிஸ்துவின் அற்புதம் அடையாளம் இவைகள் எல்லாம் அவர் தேவனுடைய குமாரன் என்று நாம் விசுவாசிக்கும்படியாக உள்ளது (யோவான் 20:30,31) எனவே பேதுருவின் பெயர் முதன்மையாக இல்லாமல் கிறிஸ்துவின் நாமமே முதன்மையாக உள்ளது (அப். 4:12).

சபை பேதுருவின் மேல் கட்டப்பட்டதாக இருந்தால் பேதுரு ஒரு தவறும் செய்யாதவராக இருக்க வேண்டும். ஏனென்றால், சபை பரிசுத்தமானது, மகிமையானது (எபே. 5:27). ஆனால், பேதுரு ஒரு சாதாரணமான மனிதனே! அவரும் தவறு செய்தவரே (கலாத். 2:11. ரோ. 3:23) தேவனுடைய மகிமையை இழந்த மனிதன் மீது மகிமைக்குரிய ஸ்தாபனமான சபை கட்டப்பட வாய்ப்பு இல்லை. பேதுருவின் மேல் சபை

கட்டப்பட்டதாக நம்புகிறவர்கள் மத். 16:13-20ல் சொல்லப்பட்ட வசனத்தின் அர்த்தத்தை தவறாக புரிந்து கொண்டு இப்படிப்பட்ட நம்பிக்கைக் கொண்டு உள்ளனர்! அதாவது பேதுரு என்றால் கற்பாறை என்றும் அதன்மீது (பேதுருவின் மீது) சபை கட்டப்பட்டது என்றும் நம்புகின்றனர். ஆனால், இயேசு நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன் என்றார் (மத். 16:18) கிரேக்க பதத்தில் பெட்றா என்றால் பாறை, கன்மலை, என்று அர்த்தம் இது பெண்பால் ஆகும். பெட்ருஸ் என்றால் கல் இது ஆண்பாலைக் குறிக்கும். இங்கே இயேசு பேதுருவைப் பார்த்து நீ பெட்றாஸ் (கல்) இருக்கிறாய் என்றார். பேதுரு அறிக்கை செய்தது ஒரு பெரிய பாறையைப்போல உள்ளதால் இந்த பெட்றாவின் மேல் (பாறை) என் சபையைக் கட்டுவேன் என்றார். சபை பெண் பாலைக் குறிக்கும் (வெளி. 19:7, 2கொரி. 11:2).

Patros - Peter - ஆண் பால்

Petra - Rock - பெண் பால்

எனவே சபை பேதுருவின்மேல் கட்டப்படவில்லை அவர் செய்த அறிக்கையின் மேல் கட்டப்பட்டது. மேலும் பவுல் விளக்கும்போது அந்தக் கன்மலை கிறிஸ்துவே என்றார் (1கொரி. 10:4) போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தை போட ஒருவராலும் கூடாது. (1கொரி. 3:11).

## II <u>பேதுரு ஒரு போப் ஆண்டவரா?</u>

முதல் நூற்றாண்டிலே சபையில் பேதுரு ஒரு போப் ஆண்டவராக இருந்துள்ளார் என்று அநேகர் நம்புகின்றனர். ஆனால், இதற்கு வேதவசனம் ஆதாரம் இல்லை. கி.பி. 33ல் எருசலேமில் கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப் பட்டதாக வேதம் கூறுகிறது. (அப். 2:37-47, ரோமர். 16:16) அதன்பின்பு கி.பி. 606ல் மூன்றாம் போனிபஸ் உலகளாவிய கத்தோலிக்க சபையை ஆரம்பித்து தங்களுக்கென்று கொள்கைளை ஏற்படுத்திக் கொண்டனர். அதில் ஒன்று போப்பாக நியமித்தலாகும். அவர்கள் பேதுருதான் முதல் போப் என்று கூறுகிறார்கள். அவர்கள் கொள்கைப்படி போப்பாக நியமிக்கப்படுபவர் திருமணமாகாதவராக இருக்க வேண்டும். ஆனால், அவர்கள் கூறும் முதல் போப் பேதுரு திருமணமானவர்! தன் மனைவியோடு அநேக இடங்களுக்குச் சென்றிருக்கிறார் (1கொரி. 9:5) என்று பவுல் எழுதுகிறார். அவர் மாமியாரிடத்தில் அன்பும், மரியாதையும் காண்பித்திருக்கிறார். அவருக்கு மாமியார் இருக்கிறார் என்று மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய எழுத்தாளர்கள் கூறுகிறார்கள் (மத். 8:14,15, மாற். 1:29,31, லூக். 4:38-39) மேலும் முதல் நூற்றாண்டிலே சபையில் மூப்பருக்கு உடன் மூப்பர் இருக்கிறேன் என்று அவரே எழுதுகிறார் (1பேதுரு 5:1) மூப்பருக்கான தகுதியாம்சங்களில் திருமணமாகி ஒரே மனைவியுடன் வசிக்க வேண்டும். மேலும், விசுவாச முள்ள பிள்ளைகள் இருக்க வேண்டும். தன் சொந்த குடும்பத்தை நன்றாய் விசாரிக்கிறவனாக இருக்க வேண்டும் (1தீமோ 3:2-5) என்று வேதம் கூறுகிறது. எனவே பேதுரு ஒரு போப்பாக இருக்கவில்லை. மேலும்

ஆண்டவர் என்ற வார்த்தையை ஆளுகை செய்யக்கூடியவரை குறிப்பிடுவார்கள் (அப். 25:25,26). அந்த அடிப்படையில் பார்க்கும்பொழுது சபையை ஆளுகை செய்யும் அதிகாரம் மனிதனுக்குக் கொடுக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவே ஆளுகை செய்பவராக இருக்கின்றார் (அப். 2:36, 1பேதுரு. 3:22).

## III பேதுரு இரத்தசாட்சியாக கொல்லப்படுதல்

பேதுருவின் குடும்பத்தைக் குறித்தும் அவரது தொழில் குறித்தும் பார்க்கும் பொழுது ஒரு பொறுப்புள்ள குடும்பத்தலைவராகவும் தன் சொந்த குடும்பத்தை நன்றாய் விசாரிக்கிறவராகவும் நிச்சயம் இருந்துள்ளார். ஒரு சமயத்தில் இயேசு தம்மைப் பின்பற்றி வருகிறவர்களைப் பார்த்து அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே (வசனத்திற்காகவே) கிரியை நடப்பியுங்கள் என்றார் (யோவ. 6:27) அதாவது வயிற்றுக்காக ஊழியம் செய்யாமல் வசனத்திற்காக ஊழியம் செய்ய வேண்டும் என்கிறார். வேதாகமம் பயிலகத்தில் பயின்ற ஒருவர் தான் அங்கம் வகித்து வரும் சபைக்கு தூணாக இருக்கக்கூடியவர், சபைக்காக தன்னையே ஒப்புக்கொடுக்கக் கூடியவர் திடீர் என்று சபைக்கு வருவதை நிறுத்திக் கொண்டார். தன்னுடைய குடும்பத்தாரையும் சபைக்குச் செல்லுவதை தடுத்தார். விவரம் தெரியாமல் இருந்த சபையார் அவரை விசாரிக்க சிலரை அனுப்பினர். அவரையும் குடும்பத்தாரையும் சபையார் சந்தித்து விசாரிக்கும்போது நாங்கள் பிழைக்க வேண்டும், சாப்பிட வேண்டும் இதற்கு ஊழியம் செய்கிறேன் என்றார். இப்படிப்பட்டவர்கள் அழிந்து போகிற போஜனத்திற்காக ஊழியம் செய்பவர்கள் இவர்களுக்கு தேவன் வயிறு (பிலி. 3:19) இப்படிப்பட்டவர்கள் வசனத்திற்காக இயேசுவைப் பின்பற்றவில்லை. எனவே அன்றைய தினம் அநேகர் பின்வாங்கிப் போனார்கள். இயேசு தம்முடைய 12 சீஷரையும் பார்த்து நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். சீமோன் பேதுரு அவருக்கு பிரதியுத்திரமாக ஆண்டவரே யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே என்றான் (யோவா 6:66-68). இங்கே பேதுரு தான் சாப்பிடவேண்டும், பிழைக்க வேண்டும், தனது குடும்பம் முக்கியம் என்று நினைத்திருந்தால் அநேகர் பின்வாங்கிப் போனதுபோல தானும் போய் இருக்கலாம்! ஆனால் பேதுரு இயேசுவை எல்லாவற்றிற்கும் மேலாக, முதன்மையாக வைத்திருந்ததால் அவன் பின் வாங்கவில்லை. நித்திய ஜீவவசனத்திற்காக தன்னையே கொடுக்கிறவராகக் காணப்பட்டார்.


பேருதுவின் மரணத்தைக்குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து முன்னுரைத்திருக்கிறார். யோவா 21:18,19ல் நீ இளவயதுள்ளவனாய் இருந்த போது உன்னை நீயே நடத்தினாய் உனக்கு இஷ்டமான இடங்களில் நடந்து திரிந்தாய், நீ முதிர்வயதுள்ளவனாகும்போது உன் கைகளை

நீட்டுவாய் வேறு ஒருவன் உன் அறையைக்கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்திற்கு உன்னைக் கொண்டுப் போவான் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இவ்விதமாக பேதுரு தனது மரணத்தின் மூலமாக தேவனை மகிமைப்படுத்தப்போகிறான் என்று முன்னுரைத்தார். பேதுருவின் மரணத்தைக் குறித்துச் சொல்லிய பின்பு பேதுருவைப் பார்த்து நீ என்னைப் பின்பற்றி வா என்றார். அதாவது மரண பரியந்தம் வரை உண்மையுள்ளவனாக பின்பற்றி வா நான் உனக்கு ஜீவ கிரீடத்தைத் தருகிறேன் என்று உணர்த்துகிறார் (வெளி. 2:10).

இயேசு கூறியபடி பேதுரு விருப்பத்திற்கெதிராய் கி.பி. 67ல் ரோம அரசாங்கம் பேதுருவை சிறையாக்கி ரோமாபுரிக்குக் கொண்டு சென்றனர். கிறிஸ்தவர்களைக் கண்டாலே மிகவும் கொடுமைப்படுத்தும் நீரோ மன்னன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் சொல்லும் பேதுருவை சும்மா விடுவானா? தனது கோபத்தை எல்லாம் பேதுருவின் மீது செலுத்தி பேதுருவை ரோமாபுரி சிறையில் மேமர்னடன் என்ற கொடுமையான சிறையில் 9 மாதம் போட்டான்! அதன் பின்பு பேருதுவை ஒரு கம்பத்தில் கட்டிவைத்து சித்திரவதை செய்து இயேசுவை மறுதலிக்குமாறு கட்டாயப்படுத்தினான். ஏற்கனவே பேதுரு இயேசுவை மூன்று முறை மறுதலித்து அதினிமித்தம் அடிக்கடி அழுது அழுது தனது கண்களை இரத்தமாக்கிய பேதுருவுக்கு நீரோ மன்னன் மறுதலிக்கச் சொன்னது மிகவும் வேதனைக்குரியதாக இருந்தது. இருப்பினும், மரணம் வரை மறுதலிக்காமல் இருந்தார்! இதனால் நீரோ மன்னர் பேதுருவை ஒரு இருட்டு அறையில் பிணக்கிடங்கில் பிணங்களோடு போட்டான். பிணங்களின் மத்தியில் உணவு, தண்ணீர் இல்லாமல் இருளில் சுமார் ஒரு மாத காலம் இருந்தார். பின்பு ரோம அரசு பேதுருவை சிலுவையில் அறைந்து கொல்லும்படி கட்டளையிட்டது. அதன் பின்பு அவரை நினைத்து அழுது தாம் இயேசுவை மறுத்தலித்து விட்டோமே என்று குமுறி அழுதாராம்! ஆண்டவராகிய இயேசுவைப் போல நேராக சிலுவையில் தொங்க எனக்கு தகுதியில்லை என்னைத் தலைகீழாக சிலுவையில் அறைந்து தொங்க விடுங்கள் இதுவே எனது கடைசி விருப்பம் என கேட்டுக்கொண்டார். அவருடைய விருப்பத்தின்படி கி.பி. 68ல் பேதுருவை ரோமாபுரியிலுள்ள வாடிகன் மலை மீது தலைகீழாக சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். யோவான் 21:19ன் படி பேதுருவின் மரணத்தினால் கிறிஸ்து மகிமைப் பட்டார்.

அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் (2தீமோ 3:12) நாம் கிறிஸ்துவுக்காகப் பாடுகளை ஏற்றுக்கொண்டு சகித்தோமானால் தேவன் மகிமைப்படுவார் (1பேதுரு. 4:16).

(தொடரும்) **K. பாஸ்கர், சிறுமுகை.**



# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

## PLEASE WATCH

ETC TV

Every Sunday from 6.00 to 6.30 a.m.

for a Christian Programme in Hindi

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

## திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் | TV | சனி | காலை | 7:30 - 7:45 |

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

ஆம், சத்தியம் விரும்பிகளுக்கும், பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்கும் பாக்கியம் வாழ்க்கையில் கிடைக்காமல் போய்விட்டதே என்று ஏங்குபவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பு.

வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 90 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

**நோட்** எங்களிடம் ஏறகனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

**த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.**
**தமிழ்நாடு. இந்தியா.**

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.
Ph : 04257 - 222555, 224555